Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, OCTOBER 12, 2022

புதன்கிழமை ஒக்டோபர் 12, 2022 | ஒளி: 08 கதிர்: 119 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## தரமிறங்கும் இலங்கை

மஹேஸ்வரி விஜயனந்தன்

நடுத்தர வருமானம் பெறும் நாட்டிலிருந்து குறைந்த வருமானம் பெறும் நாடாக இலங்கையின் நிலையைத் தரமிறக்கும் யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (11) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


தொடர்ச்சி P2

## “எனது மகன் எனக்கு வேண்டாம்”

முழுச் செய்தி P4

### பிணைமுறி மோசடி: பொதுச் சொத்து சட்ட குற்றச்சாட்டில் இருந்து

# மகேந்திரன் விடுதலை



### ஏனைய குற்றச்சாட்டுகள் குறித்து டிசெ.1இல் விசாரணை

2015ஆம் ஆண்டு மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி குறித்து தாக்கல் செய்யப்பட்ட 1ஆவது பிணைமுறி மோசடி வழக்கின் பொதுச் சொத்து சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டில் இருந்து, முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் உட்பட 10 பிரதிவாதிகளை விடுதலை செய்யுமாறு கொழும்பு நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம், நேற்று (11) கட்டளையிட்டது.

பொதுச் சொத்து சட்டத்தின் கீழ் பிரிவாதிகளுக்கு சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டைப் பேண முடியாது என்று பிரதிவாதிகள் தரப்பால் சமர்ப்பிக்கப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனையை நீதிபதிகள் குழாம் ஏற்றுக் கொண்டதையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சஞ்சீவ மொராயஸ், தமித் தொட்டவத்த, நாமல் பலேல்ல ஆகிய மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாமின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையான நீதிபதிகளின் உடன்பாட்டின் பேரில் இந்தத் தீர்மானம் அறிவிக்கப்பட்டது.

பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ், ஒரு நிறுவனத்துக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட முடியாது என்றும் பேர்பேச்சுவல் ட்ரெஷரீஸ் லிமிட்டட் ஒரு நிறுவனம் என்றும் குறிப்பிட்டு நீதிமன்றில் ஆரம்ப ஆட்சேபனையை ஜனாதிபதி சட்டத்தரணி காமினி மாரப்பன தாக்கல் செய்திருந்தார்.

அதன் அடிப்படையில், பொதுச் சொத்து சட்டத்தின் கீழ் பிரிதிவாதிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டைப் பேண முடியாது என்று பிரதிவாதிகள் தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனை ஏற்றுக்கொள்ளப்பட்டதையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## தமிழருக்கான அங்கிகாரம் வேண்டும்



தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டியது அவசியமாகும். அதில் இரண்டு பேச்சுகளுக்கு இடமிருக்கக்கூடாது. நாம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி, தமிழர்களுக்கு தீர்வை பெற்றுக்கொடுத்தால் சர்வதேசத்தை அச்சமின்றி எம்மால் எதிர்கொள்ள முடியும் என வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறவுகளுக்கான

## இழப்பீடுத்தொகையை அதிகரித்தது அரசாங்கம்

### ஒரு இலட்சம் ரூபாய் இரண்டு இலட்சமானது

மஹேஸ்வரி விஜயனந்தன்



காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறவுகளுக்கு பதிவாளர் நாயகத்தால் வழங்கப்படும் காணாமல் போனமைக்கான சான்றிதழை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்ட ஒரு இலட்சம் ரூபாய் இழப்பீடு தொகையை இரண்டு இலட்சம் ரூபாயாக அதிகரிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளதென அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பூதவுடலுடன் கொழும்பு வருவோம்

### செந்தில் எச்சரிக்கை; முரண்டு பிடிக்கிறது நிர்வாகம்

பசறை, கனவரெல்ல தோட்டத் தொழிலாளியின் மரணத்துக்கு உரிய தீர்வு கிடைக்காவிடின், அவரது பூதவுடலை கொழும்புக்கு எடுத்துவந்து போராட்டத்தில் ஈடுபட அஞ்சமாட்டோமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் எச்சரித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## ஜெனீவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்துங்கள்

### பொதுநலவாய மேம்பாட்டு அலுவலகத்தின் பணிப்பாளரும், பிரிட்டன் தூதுவரும் வலியுறுத்து



மக்களால் அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களைப் பாதுகாக்க வேண்டியது அவசியம் எனவும், இம்முறை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

## மொட்டு, யானையின் தோல்வியை மறைக்க தந்திரம்

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்து மக்களின் இறைமைக்கு விடுக்கப்பட்ட பாரிய சவால் என ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சுமத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

## உலகில் தனித்து வாழ முடியாது



ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் பாதுகாப்போம் என இலங்கை, சர்வதேசத்துக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். வாக்குறுதிகள் மீறப்பட்டுள்ள காரணத்தால் சர்வதேசம் இலங்கையை கைவிடும் நிலைமையே இன்று ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### 21/4 விவகாரத்தில்

## மைத்திரிக்கு எதிராக ஆதாரம் கிடைக்கவில்லை

### மைத்திரியின் சட்டத்தரணி நீதிமன்றில் அறிவிப்பு

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, தமது சேவை பெறுநருக்கு எதிராக எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை என, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு, நேற்று (11) அறிவித்தார்.

தொடர்ச்சி P2

### ஜோன்ஸ்டன் உட்பட மூவருக்கு

## வெளிநாட்டு பயணத்தடை



சதொச ஊழியர்களை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தினார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூவருக்கு, வெளிநாட்டு பயணத்தடை விதித்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா, நேற்று (11) உத்தரவிட்டார்.

2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் முதலாவது பிரதிவாதியான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சராக கடமையாற்றிய போது, சதொச ஊழியர்களை சட்டவிரோதமான முறையில் தேர்தல் பணிகளுக்காக ஈடுபடுத்தியதாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு குற்றப்பத்திரம் தாக்கல் செய்தது.

இந்த வழக்கு நேற்று (11) எடுத்துக்கொள்ளப்பட்ட போது, ஆணைக்குழுவால் மீண்டும் அதிகுற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதுடன், முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, லங்கா சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் எராஜ் பெர்னாண்டோ மற்றும் ஜோன்ஸ்டனின் பிரத்தியேக செயலாளர் ராஜ் மொஹிதீன் மொஹமட் சக்கீர் ஆகிய பிரதிவாதிகளுக்கு பகிரப்பட்டது.

அதனையடுத்து, குற்றம்சாட்டப்பட்டவர்களை தலா 50,000 ரூபாய் ரொக்கப் பிணையிலும் தலா 5 இலட்சம்

தொடர்ச்சி P2

### ஐ.எம்.எப் மற்றும் உலக வங்கியின்

## ஒத்துழைப்புடன் மீள நினைக்கிறோம்

### இலங்கை பிரதிநிதிகள் தெரிவிப்பு

உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் உதவியுடன், கடன் நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதாக, சர்வதேச நாணய நிதியம் மற்றும் வங்கி ஒன்றிணைந்து நடத்தும் வருடாந்த ஒன்றிணைந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் நோக்கில் அமெரிக்கா சென்றுள்ள நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோர் சர்வதேச நாணய நிதியத்தின் முதலாவது துணை நிர்வாக இயக்குநர் கீதா கோபிநாத்திடம் தெரிவித்துள்ளனர்.

உலகப் பொருளாதாரத்தை வழிநடத்தும் உலகளாவிய போக்குகள், வறுமை ஒழிப்பு, பொருளாதார வளர்ச்சி, உதவிப் பயன்பாட்டின் திறன் ஆகியவற்றை மதிப்பீடு செய்வது குறித்து சர்வதேச நாணய நிதியம் மற்றும் வங்கி ஒன்றிணைந்து அமெரிக்காவின் வொஷிங்டனில்

தொடர்ச்சி P2



## ரணிலுக்கு தெரிந்ததை நாமலே கூறுகிறார்

பா.நிரோஸ்

தேர்தலை காலந்தாழ்த்தி ரணில்-ராஜபக்ஷர்கள் அதிகாரத்தில் தொடர்ந்திருக்க நினைத்தால், ஜூலை 9ஆம் திகதி அரசாங்கத்துக்குக் கிடைத்த பிரதிப்பலனைவிட அதிகளவான பிரதிபலன் கிடைக்குமென ஐக்கிய மக்கள் சக்தி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ரணில் ஜனாதிபதியாகி ஐக்கிய தேசிய கட்சியைக் கட்டியெழுப்ப முயன்றார். ஆனால் அது நடக்கவில்லை. இதனாலேயே ரணில் தேர்லைக் காலந்தாழ்த்த முயல்கிறார். தோல்வியை அறிந்தே நாமல் ராஜபக்ஷ எம்.பியும் தேர்தல் வேண்டாமென கூறுகிறார் என்றார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (11) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானே ஜனாதிபதி இக்கடும் எச்சரிக்கையை விடுத்தார்.

தொடர்ச்சி P2

## குழந்தைகளை கேடயமாக்க வேண்டாம்

### தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

கடந்த சில மாதங்களாக போராட்டத்தில் குழந்தைகள் ஈடுபடுத்தப்பட்டதாக முறைப்பாடுகள் பல கிடைத்துள்ளதாகவும், போராட்டங்களின் போது குழந்தைகளை கேடயமாக பயன்படுத்த வேண்டாம் எனவும் பொதுமக்களிடம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## ரணிலால் முடியாது

பா.நிரோஸ்

மக்கள் ஆணையின் ஊடாகத் தெரிவு செய்யப்படாத ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால், தேர்தல் முறையில் மாற்றங்களைக் கொண்டுவர முடியாதென தெரிவிக்கும் கோப் குழுவின் முன்னாள் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத், நினைத்ததுபோல ஜனாதிபதியால் செயற்பட முடியாது எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# பூதவுடலுடன் கொழும்பு வருவோம்

செந்தில் தொண்டமானுக்கும் கனவரெல்ல தோட்ட நிர்வாகத்துக்கும் இடையில் நேற்று (11) இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

தொழிலாளியின் மரணத்துக்கு ஒரு கோடியே 2 இலட்சம் ரூபாய் நட்டஈடாக வழங்க வேண்டும். தோட்ட முகாமையாளர் மற்றும் தொழிற்சாலை அதிகாரி உடனடியாக இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்றும் செந்தில் தொண்டமான் நிபந்தனை விதித்துள்ளார்.

இவ்விரு நிபந்தனைகளுக்கும் நிர்வாகம் இணங்காவிடின் கொழும்பில் உள்ள நமுனுகல பெருந்தோட்ட நிறுவனத்தின் தலைமைக் காரியாலயம் முன் தொழிலாளியின் பூதவுடலை வைத்து போராட்டம் செய்யவும் தயாராக உள்ளோமென எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் குடும்பத்தினர் எடுக்கும் சட்ட நடவடிக்கைக்கு இ.தொ.கா உறுதுணையாக முன்நிற்கும் என்றார்.

இன்றைய பேச்சுவார்த்தையின் போது, உயிரிழந்த தொழிலாளியின் மரண சடங்குகளுக்கான முழுமையான செலவை மாத்திரமே தாம் பொறுப்பேற்பதாக தோட்டம் நிர்வாகம் தெரிவித்தது. அதற்கு கடுமையான எதிர்ப்பை இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் வெளிப்படுத்தினார்.

இளைஞனின் மரணத்துக்கு நட்டஈடு வழங்கப்படாத பட்சத்தில் பூதவுடல் தொழிற்சாலையிலே வைக்கப்படும் என எச்சரித்தார். அதனை தொடர்ந்து உயிரிழந்த குடும்பத்துக்கு 15 இலட்சம் ரூபாய் நஷ்டஈடாக வழங்க நிர்வாகம் முன்வந்தது.

அந்த தொகை போதுமானதல்ல. 21 வயதுடைய தொழிலாளியே உயிரிழந்துள்ளார். அவர், தோட்டத்தில் மேலும் 34 வருடங்களுக்கு மேல் பணிபுரிய முடியும். தற்போது வழங்கப்படும், நாளொன்றுக்கான 1,000 ரூபாய் சம்பளத்தின் பிரகாரம் கணக்கிட்டால் நட்டஈட்டு தொகையாக, ஒரு கோடியே 2 இலட்சம் ரூபாய் வழங்கவேண்டுமென செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

24 வயதுடைய கணேசமூர்த்தி என்ற இளைஞன், தோட்ட அதிகாரியின் வீட்டில் நீர் குழாய் திருத்துவதற்காக சென்ற வேளை மின்சாரம் தாக்கி கடந்த 9ஆம் திகதி உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மைத்திரிக்கு எதிராக ஆதாரம் கிடைக்கவில்லை

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில், தனக்கு எதிரான நீதவான் விசாரணை மற்றும் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டதை சவாலுக்கு உட்படுத்தி முன்னாள் ஜனாதிபதி தாக்கல் செய்த ரிட் மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகிய இருவர் அடங்கிய அமர்வு முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அறிவித்த ஜனாதிபதி சட்டத்தரணி, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழு சமர்ப்பித்த அறிக்கையில், தனது சேவை பெறுநருக்கு எதிராக எவ்வித குற்றச்சாட்டுகளோ, ஆதாரங்களோ சுமத்தப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல் செய்திருந்த போதிலும், பிரதிவாகளுக்கு அழைப்பாணை விடுக்காமல் கொழும்பு மேல் நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்ததையும் சுட்டிக்காட்டினார்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் மிகவும் மந்தகதியில் இடம்பெற்று வருவதாக முறைப்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளதாக ஜனாதிபதியின் சட்டத்தரணி தெரிவித்தார்.

## வெளிநாட்டு பயணத்தடை

ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் விடுதலை செய்யுமாறும் உத்தரவிட்ட நீதிபதி, பிரதிவாதிகளுக்கு வெளிநாட்டு பயணத்தடை விதித்து உத்தரவிட்டார்.

அவர்களின் கடவுச்சீட்டுகளை கையகப்படுத்துமாறு நீதிமன்ற பதிவாளருக்கு உத்தரவிட்ட நீதிபதி, பிரதிவாதிகளின் கைரேகைகளை எடுத்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டதுடன், வழக்கு விசாரணையை நவம்பர் 29ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# உலகில் தனித்து வாழ முடியாது

உலகிலிருந்து தனித்து வாழ இலங்கையால், முடியாது என முன்னாள் சபாநாயகருக்கு சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவருமான கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

ஆட்சியாளர்கள் அதிகார மோகத்தில், அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்டு ஆட்சி நடத்தவே முயற்சிக்கின்றனர். 20ஆம் திருத்தச்சட்டதின் ஊடாக கொண்டுவரப்பட்ட மிக மோசமான அதியுச்ச அதிகாரத்தை நீக்க வேண்டும் என்பதே எமது தொடர்ச்சியான கோரிக்கையாக உள்ளது. எமது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை. 22ஆம் திருத்தத்தை கொண்டவர வேண்டுமென்ற கோரிக்கையை நாம் முன்வைத்துள்ளோம். அதனை பாராளுமன்றத்துக்கு கொண்டுவந்து இறுதி நேரத்தில் பிற்போட்டுள்ளனர். இவ்வாறான செயற்பாடுகள் ஜனநாயகத்தை பாதிக்குமா என்ற அச்சமும் எம்மத்தியில் உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நான் சந்தித்த வேளையிலும், 22 ஆம் திருத்தத்தை கொண்டுவந்து பாராளுமன்றத்திற்கு அதிகாரத்தை கொடுப்பேன் என்ற வாக்குறுதியை வழங்கியிருந்தார். 22 முழுமையான தீர்வென கூற முடியாது, ஆனால், புதிய அரசியல் அமைப்பை கொண்டுவரும் வரையிலேனும் 22ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தி சுயாதீன ஆணைக்குழுக்களை இயக்க வேண்டும்.

சர்வதேச மட்டத்திலும் இது குறித்த அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. குறிப்பாக ஜெனிவா பேரவையில் அதனை சுட்டிக்காட்டியுள்ளனர். சர்வதேசம் இலங்கையை கைவிடும் நிலைமையே ஏற்பட்டுள்ளது. எம்மால் உலகில் தனித்து வாழ முடியாது. எனவே சர்வதேசத்துக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்றார்.

# மகேந்திரன் விடுதலை

மேலும், பொதுச் சொத்து சட்டத்தின் கீழான குற்றச்சாட்டை தவிர ஏனைய குற்றச்சாட்டுகள் எதிர்வரும் டிசெம்பர் 16ஆம் திகதி விசாரணைக்கு உட்படுத்தப்படும் என்று நீதிபதிகள் குழாம் அறிவித்தது.

2015ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி இடம்பெற்ற பிணைமுறி ஏலத்தில் சுமார் 688 மில்லியன் ரூபாய் நிதி இழப்பு ஏற்பட்டமைக்கு அர்ஜுன் மஹேந்திரன் பொறுப்பாக இருந்தார் என்றும் அவருக்கு உதவினர் என்ற குற்றச்சாட்டின் கீழ் 10 பிரதிவாதிகளுக்கு எதிராக, 23 குற்றச்சாட்டுகளின் கீழ் சட்டமா அதிபரால் கொழும்பு நிரந்தர நீதாய மேல் நீதிமன்றில் அதிகுற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், அதன் முன்னாள் பிரதி ஆளுநர் பத்தினிகே சமரசிறி, பேர்பேச்சுவல் ட்ரெஷரீஸ் லிமிட்டட், அதன் பணிப்பாளர்களான அர்ஜுன் அலோசியஸ், ஜெப்ரி அலோசியஸ், நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன உள்ளிட்ட பத்து பேருக்கு எதிராக பொதுச் சொத்து சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கின் முதலாவது பிரதிவாதியான முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், சிங்கப்பூரிலும் 10 ஆவது பிரதிவாதியாகப் பெயரிடப்பட்டுள்ள பேர்பேச்சுவல் ட்ரெஷரீஸ் லிமிட்டட் நிறுவனத்தின் பணிப்பாளர் அஜஹான் கார்டி புஞ்சிஹேவா மலேசியாவிலும் வசிப்பதால் அவர்கள் இன்றி வழக்கு விசாரணையை முன்னெடுக்க கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜெனிவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்துங்கள்

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோருடன் பொதுநலவாய, மேம்பாட்டு அலுவலகத்தின் இந்து-பசிபிக் பிராந்திய பணிப்பாளரும் இந்தியாவுக்கன பணிப்பாளருமான பென் மெல்லர், மற்றும் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமைகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், இலங்கையின் அண்மைக்கால மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுக்கள், அரசியல் செயற்பாடுகள் குறித்து முக்கியத்துவம் கொடுத்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

மக்களின் அமைதியான போராட்டங்களுக்கு இடமளிப்பதும், மக்களின் கருத்துகளுக்கு இடமளிப்பதும் ஜனநாயக பண்பாகும் என்பதை சுட்டிக்காட்டியுள்ள இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன், போராட்டங்களை பாதுகாப்பது அவசியம் எனவும் தெரிவித்துள்ளார். அத்துடன் இம்முறை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட 51/L 1 பிரேரணையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும், பொறுப்புக்கூறல் விடயத்தில் அரசாங்கத்தின் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதையும் இவர்கள் நீதி அமைச்சரவிடத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், 22 ஆம் திருத்த சட்டமூலம் நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது. 22ஆம் திருத்த சட்டம் விரைவில் நிறைவேற்றப்படும் எனவும், ஜெனிவா தீர்மானங்களை கருத்தில் கொண்டு அரசாங்கம் தேசிய பொறிமுறையை வலுப்படுத்தும் எனவும் நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# ஒத்துழைப்புடன் மீள நினைக்கிறோம்

நடாத்தும் வருடாந்த ஒன்றிணைந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் நோக்கில் அமெரிக்கா சென்றுள்ள நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோர் சர்வதேச நாணய நிதியத்தின் முதலாவதுசர்வதேச நாணய நிதியம் துணை நிர்வாக இயக்குனர் கீதா கோபிநாத்தை சந்தித்து இலங்கை எதிர்நோக்கும் கடுமையான சவால்கள் மற்றும் அவற்றைச் சமாளிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கை தற்போது எதிர்நோக்கும் மிக மோசமான பொருளாதார நெருக்கடிகள், சவால்கள் மற்றும் அவற்றைச் சமாளிப்பதற்கு எடுக்கப்படும் உறுதியான நடவடிக்கைகள் குறித்து இதன்போது கலந்துரையாடியுள்ளதுடன், உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் உதவியுடன் கடன் நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதாகவும் தெரிவித்துள்ளனர். அதேபோல் கடன் மறுசீரமைப்பு விடயத்தில், இருதரப்பு மற்றும் பல் தரப்பு கடன் வழங்குநர்களை இணக்கத்திற்கு கொண்டுவர முயற்சிப்பதாகவும், அதற்கான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க சுட்டிக்காட்டியுள்ளனர்.

# ரணிலுக்கு தெரிந்ததை நாமலே கூறுகிறார்

இதன்போது தொடர்ந்து கருத்துரைத்த அவர், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதிநித்துவப்படுத்துகிறார். எனவே, தேர்தல் ஒன்றுக்கு சென்றால் மொட்டுக் கட்சிக்குப் படுதோல்வி கிடைக்குமென ரணிலுக்கு தெரியும் என்றார். இதனாலேயே நாமல் தேர்தல் வேண்டாமென கூறிவருகிறார். தேர்தலைக் காலந்தாழ்த்தும் சதிகளையே ராஜபக்ஷ- விக்கிரமசிங்க செய்கிறார்கள் என்றார்.

## மொட்டு, யானையின் தோல்வியை மறைக்க தந்திரம்

உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதை காலந்தாழ்த்துவதே ஜனாதிபதியின் நோக்கம் என்பது இதனூடாக தெரிவதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ள அவர், உள்ளூராட்சி சபை தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசிய கட்சிக்குக் கிடைக்கும் தோல்விகளை மூடிமறைக்கும் தந்திரமே ரணிலின் அறிவிப்பு எனவும், தேர்தல் ஆணைக்குழுவுக்கு உள்ள அதிகாரத்தை நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி மிகக் கீழ்த்தரமான முறையில் அபகரிக்கப் பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழு தனது அதிகாரங்களைப் பிரயோகித்து உடனடியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்வதாகவும், குறுகிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக உள்ளூராட்சி சபைத் தேர்தலையோ அல்லது எந்தவொரு தேர்தலையும் ஒத்திவைக்க ஜனாதிபதி செயற்பட்டால், பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் ஜனநாயக ரீதியில் அதற்கு எதிராக மேற்கொள்ளக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம் எனவும் எச்சரித்துள்ளார்.

# ரணிலால் முடியாது

சுதந்திர மக்கள் காங்கிரஸின் தலைமையகத்தில் நேற்று (11) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஆணையின் ஊடாக ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படவில்லை. பாராளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மை வாக்குகளாலேயே அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். எனவே மக்கள் ஆணை இல்லாத ரணில் தான் நினைத்தவற்றையெல்லாம் செயற்படுத்த முடியாது எனவும் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்முறையை மாற்ற வேண்டுமென தற்போதைய அரசாங்கம் முன்வைத்திருந்த எந்த தேர்தல் விஞ்ஞானபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது? முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் ஜனாதிபதி தேர்தலின்போது முன்வைத்த தேர்தல் விஞ்ஞானபத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளதா? எனவும் கேள்வி எழுப்பினார்.

கனவில் காண்பது, நினைத்தை செய்து என்பவற்றை மக்கள் ஆணையில் தெரிவு செய்யப்படாத ஜனாதிபதியால் செய்ய முடியாது என்றார்.

# தரமிறங்கும் இலங்கை

தொடர்ந்து தெரிவித்த அவர், சர்வதேச நிறுவனங்களால் வழங்கப்பட்ட தகவல்களைப் பின்பற்றி, எதிர்கால கடன்களை எளிதாக்கும் வகையில் இந்த தரமிறக்கல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன், எப்போது இந்த தரமிறக்கல் உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்படும் என வினவப்பட்ட போது, சர்வதேச அமைப்புகளால் அந்த அமைப்புகளின் ஆவணங்களில் குறைந்த வருமானம் பெறும் நாடாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் தான் இலங்கை குறைந்த வருமானம் பெறும் நாடாக அறிவிக்கப்படும் என்றும் இந்த வகைப்படுத்தலானது சர்வதேச வகைப்படுத்தலே அன்றி, எம்மால் மேற்கொள்ளப்பட்டவை அல்ல என்றார்.

## தமிழருக்கான...

தமிழ் மக்களுடன் தொடர்ந்தும் பிளவுபட்டு இருக்க முடியாது. அவர்களையும் அங்கிகரித்து எமது தேசிய பயணத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயத்தில் இப்போதாவது நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். வெறுமனே வாக்குறுதிகளை மாத்திரம் கொடுத்து தப்பித்துக்கொள்ள முடியாது. 22ஆம் திருத்தத்தை கொண்டுவருவதும் அதில் முக்கியமான அம்சமாகும்.

அதிகாரம் பகிரப்படுவதுடன், பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குவதும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதும் அவசியமானதாகும். வெகு விரைவில் பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கும், சட்டத்தை கொண்டுவருவோம் என்றார்.

# இழப்பீட்டுத்தொகையை அதிகரித்தது அரசாங்கம்

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (11) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர்,

இதற்கமைய, 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நெருங்கிய உறவுகளுக்கு 1 இலட்சம் ரூபாயட நிதியுதவி வழங்க அமைச்சரவையில் தீர்மனிக்கப்பட்டாலும் காணாமல் போனமைக்கான சான்றிதழைப் பெற்றுக்கொள்ள நீண்டகாலம் செல்கின்றமை, அவர்களுக்கான ஒரு இலட்சம் ரூபாய் நிதி போதாமைக் காரணமாக குறித்த இழப்பீட்டு அலுவலகத்தால் பெற்றுக்கொள்ள வேண்டிய சான்றிதழின் தேவையை நீக்குவதற்கும் இழப்பீட்டு தொகையை அதிகரிக்கவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்றார்.

# குழந்தைகளை கேடயமாக்க வேண்டாம்

போராட்டங்கள் நடத்தும் இவ்வாறான இடங்களுக்கு சிறுவர்களை அழைத்துச் செல்வதன் மூலம் அவர்கள் விபத்துக்கள், அடக்குமுறைகளுக்கு ஆளாக நேரிடும் எனவும், உயிருக்கு ஆபத்து ஏற்படக் கூடும் எனவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் கலாநிதி உதயகுமார தெரிவித்துள்ளார்.

போராட்டங்களின் போது சிறுவர்களுக்கு ஏதேனும் மன உளைச்சல் அல்லது அசௌகரியம் ஏற்பட்டிருந்தால் அது தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் , அத்துடன், மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருந்தால், தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படும் என்றார்.

திருக்கோணேஸ்வரம் கோவிலின்

# புனிதத்தன்மை பாதுகாக்கப்படும்

## அமைச்சர்களான டக்ளஸ், விதுர நிலைமைகளை நேரில் ஆராய்வு





திருகோணமலை, திருக்கோணேஸ்வரம் கோவிலின் புனிதத் தன்மைக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ள வியாபார நிலையங்களை பொருத்தமான இடங்களுக்கு மாற்றுவதற்கு கலாசார மற்றும் மத விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், வியாபார நிலையங்களை அமைப்பதற்கு பொருத்தமான இடங்களை அமைச்சர்கள் இருவரும் பார்வையிட்ட நிலையில், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தொல்லியல் திணைக்கள அதிகாரிகளுக்கு அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க அறிவுறுத்தல் வழங்கினார்.

திருக்கோணேஸ்வர கோவில் முன்றலில் வியார செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களால் கோவிலின் பாரம்பரியத்துக்கும் விழுமியங்களுக்கும் பாதிப்பு ஏற்படுவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில், ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய, குறித்த இரண்டு அமைச்சர்களும் நேற்று (11) திருகோணேஸ்வர கோவிலுக்கு நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்தனர்.

இதன்போது, குறித்த பிரதேசத்தில் வியாபார செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட காலப் பகுதியில், எந்தவொரு தரப்பினாலும் அதிருப்தி வெளியிடப்படாத நிலையில், குறிப்பிடத்தக்களவு காலம் வியாபார நிலையங்களை நடத்தி வருகின்றவர்களின் வாழ்வாதாரத்தையும் கருத்தில் கொண்டு, கோவிலின் புனிதத்துக்கு களங்கம் ஏற்படாத வகையில், பொருத்தமான இடங்களில் வியாபார நிலையங்களை அமைத்து வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னதாக, திருக்கோணேஸ்வரம் கோவிலின் நிர்வாக சபையினரைச் சந்தித்துக் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, "இந்த நாட்டில் இருக்கின்ற அனைத்து மதங்களின் விழுமியங்களும் நம்பிக்கைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தற்போதைய அரசாங்கம் இருக்கின்ற நிலையில், எந்தவொரு மதத்தினதும் நம்பிக்கைகளுக்கு எதிரான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுமாயின் அதுதொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்று தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்க

# சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லும் நிலைப்பாட்டில் ஜனாதிபதி ரணில்

மஹேஸ்வரி விஜயனந்தன்



நாட்டின் தற்போதைய பொருளாதார, அரசியல், சமூக நெருக்கடிக்குள் எட்டாயிரமாக உள்ள உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்க தெரிவுக்குழு அனுமதி வழங்காவிடின், இது தொடர்பில் மக்கள் அபிப்பிராயங்களை பெற சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லும் விருப்பத்துடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளார் என அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (11) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான செலவை மக்களால் தாங்கிக்கொள்ள முடியாதளவு பாரிய சுமையாக உள்ள நிலைமையை மாற்றுவதற்கான அடிப்படை யோசனையாகவே ஜனாதிபதி இந்த யோசனையை முன்வைத்துள்ளார்.

இதற்கமைய, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்காயிரமாக குறைத்து, உள்ளூராட்சி மன்றங்களை அமைக்கும் போது, தற்போதுள்ள தவிசாளருக்கு கிடைக்கும் தனி அதிகாரத்தை மாற்றி, குழுவொன்றின் மூலம் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கும் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்டதிட்டங்களை மாற்றுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான யோசனை ஜனாதிபதியால் தெரிவுக் குழுவுக்கு முன்வைக்கப்பட்டு, அங்கு அனுமதி கிடைக்காவிடின் சர்வஜன வாக்கெடுப்புக்குச் சென்று இந்த உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்க மக்கள் விரும்புகின்றனரா என்பது தொடர்பில் மக்களின் அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொள்ள ஜனாதிபதி விருப்பத்துடன் இருக்கிறார் என்றார்.

# சாரதி அனுமதிப்பத்திர கட்டணங்கள் உயர்வு




சாரதி அனுமதிப்பத்திரத்தை பெறுவதற்கான மற்றும் சாரதி அனுமதி பத்திரத்தை புதுப்பிப்பதற்கான கட்டணங்கள் உட்பட அதுசார்ந்த அனைத்து கட்டணங்களும் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் பந்துல குணவர்தனவால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அமைச்சரால் ஒக்டோபர் 10ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய, சாதாரண சேவை மற்றும் ஒருநாள் சேவைக்கான கட்டணங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க சாரதி அனுமதிப்பத்திர அறவீட்டு ஒழுங்குவிதிகளை இரத்துச் செய்துள்ள அமைச்சர், 2022ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க மோட்டார் வாகன அறவீட்டு ஒழுங்கு விதிகள் அமல்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய புதிய சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் பழகுநர் அனுமதிப்பத்திரத்தை ஒரு வகுப்புக்கு பெறுவதற்கான ஒருநாள் சேவை கட்டணமாக 3,500 ரூபாயும் சாதாரண சேவை கட்டணமாக 2,500 ரூபாயும் அறவிடப்படவுள்ளது.

மேலும், இரண்டு வகுப்புகளுக்கு சாதாரண சேவை கட்டணம் 3,000 ரூபாயாகவும் ஒருநாள் சேவை 3,500 ரூபாயாகவும், 3 வகுப்புகளுக்கு சாதாரண சேவை கட்டணம் 3,500 ரூபாயாகவும் ஒருநாள் சேவை 4,000 ரூபாயாகவும் அறவிடப்படவுள்ளது.

அனுமதிப்பத்திரத்துக்கான எழுத்து மூல பரீட்சைக்கு 500 ரூபாயும் செயன்முறைப் பரீட்சைக்கு 1,000 ரூபாயும் சிறிய எல் பலகைக்கு 500 ரூபாயும் பெரிய எல் பலகைக்கு 1,000 ரூபாயும் அறவிடப்படும்.

மேலும், அனுமதிப்பத்திரம் காலாவதியான ஓர் ஆண்டுக்கு அல்லது ஓர் ஆண்டுக்கும் குறைவான காலப்பகுதிக்கான மேலதிக அறவீடாக, 500 ரூபாயும், அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கு சாதாரண சேவைக்கு 2,800 ரூபாயும் ஒருநாள் சேவைக்கு 4,000 ரூபாயும் அறவிடப்படவுள்ளது.

விசர்நாயைப் போல

# பொலிஸாரை இயக்குவது யார்?

பா.நிரோஸ்




பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதி வசமிருந்தாலும் விசர் நாய்களைப் போல பொலிஸாரை இயக்குவது யார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேள்வி எழுப்பினார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (11) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், போராட்டங்களை அடக்கும்போது பொலிஸார் சண்டியர்களைப் போல நடந்துக்கொள்கிறார்கள். ஜனாதிபதி வசம் பாதுகாப்பு அமைச்சு இருக்கிறபோதிலும், விசர் நாயைப்போல பொலிஸார் நடந்து கொள்வதற்கு யார் கட்டளைகளைப் பிறப்பிக்கிறார்கள்? பொலிஸாரை இயக்குவது யார்? எனவும் கேள்வி எழுப்பினார்.

அரசியல்வாதிகளின் கைபொம்மையாகி, நாட்டு மக்களின் ஜனநாயக ரீதியான உரிமைகளைப் பறிக்கும் செயற்பாடுகளில் பொலிஸார் ஈடுபட வேண்டாமென பொலிஸ் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளிடம் தெரிவிப்பதாகவும் கூறினார்.

களுத்துறையில் நடைபெற்ற மொட்டுக் கட்சியின் கூட்டத்தில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உடைகளை அவிழ்த்துவிட்டதாகவும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, வவுணதீவில்

# சோலார் யுனிவர்ஸ் அங்குரார்ப்பணம்

மட்டக்களப்பு, வவுணதீவில் 10 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட தரைத் தளத்தில் பொருத்தப்பட்ட சோலார் யுனிவர்ஸ் சூரிய மின் நிலையம், நேற்று (11) காலை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

வின்ட் போர்ஸ், விது லங்கா மற்றும் ஹை-எனர்ஜி ஆகிய நிறுவனங்களால் குறித்த சோலார் யுனிவர்ஸுக்கு முதலீடு செய்யப்பட்டுள்ளதாகவும் நாட்டிலேயே முதல் விவசாய மின்னழுத்த சூரிய மின் நிலையம் இது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது ஆண்டுக்கு 20 ஜிகாவோட் மின்சாரத்தை தேசிய மின்கட்டமைப்புக்கு வழங்கும் என்று தெரிவித்த அமைச்சர், 15,000 மெற்றிக் தொன் காபனீரொட்சைட் உமிழ்வை வருடாந்தம் குறைக்கும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சூரிய மின் நிலையத்தில் 18,676 சோலார் ஃபோட்டோவோல்டாயிக் (பிவி) தொகுதிகள் கொண்ட 243 ஒற்றை அச்சு தடமி (சூரிய வெளிச்சத்தை நோக்கி திரும்பும்) தொகுதிகள் பொருத்தப்பட்டுள்ளன என்றார்.

47 இன்வேர்ட்டர்கள், நான்கு ஸ்மார்ட் மின்னழுத்த நிலையங்கள் மற்றும் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட மேற்பார்வை கட்டுப்பாடு மற்றும் தரவு கையகப்படுத்தல் அமைப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கை உள்ளிட்ட 54 நாடுகளுக்கு

# கடன் நிவாரணம் மிகவும் அவசியமாகும்

## ஐ. நா வளர்ச்சித் திட்ட அறிக்கையில் குறிப்பு

உலகளாவிய நெருக்கடிகள் அதிகரித்து வரும் நிலையில், உலகின் மிக வறிய மக்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் வசிக்கும் 54 நாடுகளுக்கு கடன் நிவாரணம் மிகவும் அவசியத் தேவையாக உள்ளதாக ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தால் வெளியிடப்பட்டுள்ள புதிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த 54 நாடுகளில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கடன் நிவாரணத்தில் 'மிகக் கொஞ்சம் மிக தாமதம்' என்பதைத் தவிர்த்தல்' எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அந்த அறிக்கையில், பல்வேறு வளர்முக நாடுகள் சமீப காலமாக கடன் நெருக்கடியை எதிர்கொள்வதாகவும், ஒருங்கிணைக்கப்பட்ட நிதி மற்றும் பணச் சுருக்கம் மற்றும் குறைந்த வளர்ச்சி ஆகியவை உலகெங்கிலும் ஏற்ற இறக்கத்தைத் தூண்டுவதால் சந்தை நிலைமைகள் வேகமாக மாறி வருகின்றன எனவும், வறிய, கடனாளி நாடுகள் ஒன்றிணைந்து, பொருளாதார அழுத்தங்களை எதிர்கொள்கின்றன என்றும் மேலும் பலர் தங்கள் கடனைத் திருப்பிச் செலுத்தவோ அல்லது புதிய நிதியுதவியை அணுகவோ இயலாதுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட நிதி மற்றும் பணச் சுருக்கம் மற்றும் குறைந்த வளர்ச்சி ஆகியவை உலகெங்கிலும் ஏற்ற இறக்கத்தை தூண்டுவதால், சந்தை நிலைமைகள் வேகமாக மாறி வருகின்றன என்றும், கொவிட் -19 பெருந்தொற்றால் நீண்ட காலத்திற்கு முன்பே பாதிக்கப்பட்ட பல நாடுகளில் கடன் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாகவும் ஐ.நா கூறியுள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கஜீமாவத்தை அறிக்கை பிரதமரிடம் கையளிப்பு



கொழும்பு-14, தொட்டலங்க, கஜீமாவத்தை குடியிருப்பில் தொடர் தீவிபத்துகள் ஏற்படுவது தொடர்பில் ஆராய்வதற்கு பிரதமர் தினேஸ் குணவர்தனவால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை பிரதமரிடம் நேற்று முன்தினம் (10) கையளிக்கப்பட்டுள்ளது.

கஜீமாவத்தையில் கடந்த ஒன்றரை வருடங்களுக்குள் மூன்று தடவைகள் தீவிபத்துகள் ஏற்பட்டுள்ளன. இதனால் அதிகளவான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து இத்தொடர் தீவிபத்துகளுக்கான காரணங்களைக் கண்டறிய பிரதமர் தினேஸ் குணவர்தன குழுவொன்றை நியமித்திருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் மேஜர் பிரதீப் உதுகொட, கொழும்பு மாவட்ட செயலாளர் பிரதீப் யசரத்ன தலைமையில் இக்குழு நியமிக்கப்பட்டிருந்தது. இக்குழு கஜீமாவத்தை தீவிபத்து சம்பவங்கள் தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொண்டுள்ளதோடு, பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையையும் கையளித்துள்ளது.

முறைப்பாடு செய்யச் சென்றிருந்த

# ஊடகவியலாளருக்கு ஓ.ஐ.சி இடையூறு

பா.நிரோஸ்

கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்யச் சென்றிருந்த இலங்கை இளம் ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவரும் ஊடகவியலாளருமான தரிந்து ஜயவர்தனவுக்குப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

காலி முகத்திடலில் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போராட்டத்தில் உயிரிழந்தவர்களை நினைவுக்கூரும் நிகழ்வுக்கு பொலிஸார் ஏற்படுத்தியிருந்த தடைகளைக் கண்டித்து, சட்டத்தரணிகள் உள்ளிட்டப் பலர் நேற்று முன்தினம் (10) போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இப்போராட்டம் தொடர்பில் ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தன, கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு முன்கூட்டியே அறிவித்திருந்தபோதிலும், அவ்வாறு அறிவிக்கவில்லை எனக்கூறி நேற்று முன்தினம் (10) முன்னெடுக்கப்பட்ட போராட்டப் பேரணிக்கும் பொலிஸார் இடையூறு ஏற்படுத்தியிருந்தனர்.

பொலிஸாரின் இச்செயற்பாடுகளுக்கு எதிராக கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்றிருந்த இளம் ஊடகவியலாளர் சங்கத்தின் முறைப்பாட்டை, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளார்.

மேலும், ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தனவின் அலைபேசியை பறிக்க பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முயன்றதோடு தனக்கு அச்சுறுத்தல் விடுத்ததாகவும் தரிந்து தெரிவித்தார்.

வவுனியா மோட்டார் திணைக்களத்தில்

# தமிழ் அதிகாரிகள் இன்மையால் சிரமம்

■ க. அகரன்

வவுனியா மாவட்ட செயலகத்தில் உள்ள மோட்டார் திணைக்களத்தில், தமிழ் அதிகாரிகள் இல்லாமையால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

சாரதி அனுமதி பத்திரம் புதுப்பித்தல் உட்பட இன்னோரன்ன தேவைகளுக்காக மோட்டார் திணைக்களத்தை நாடும் தமிழ் மக்களுடன் சிங்கள மொழியில் இங்கு கடமையாற்றும் அதிகாரிகள் உரையாடுவதால், தமிழ் மக்கள் மொழி புரியாமல் பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுத்து வருவதுடன், மோட்டார் திணைக்களத்தின் முழுமையான சேவையையும் பெற்றுக்கொள்ள முடியாமல் அவதியுறுகின்றார்கள்.

தமிழ் மொழி தெரியாத அதிகாரிகள் இங்கு கடமையாற்றுவதால், தமிழ் மக்கள் தமது தேவையை நிறைவேற்ற, நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் கடும் வெயில் நேரங்களில் நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்து, படிவங்களை உரிய அதிகாரியிடம் வழங்கிய போதிலும், மேலதிகாரி கையொப்பமிட்டு வழங்குவதற்கு பல மணி நேரம் எடுப்பதாகவும் பயன்பெற வந்தோர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக, பல்வேறு தரப்பினருக்கும் அறிவித்த போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

## வீடுடைத்து வெங்காயம் திருட்டு

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணம், உரும்பிராய், யோகபுரம் தோட்ட பகுதியில் உள்ள வீட்டை வெங்காயம் சேகரித்து வைப்பதற்காக பயன்படுத்தி வந்த நிலையில், வீட்டின் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள், அங்கு சேகரித்து வைத்திருந்த 500 கிலோ கிராம் வெங்காயத்தை களவாடி சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



கிளிநொச்சி குளத்தின் கீழ்

## பராமரிப்பு வேலைகள் குறித்து விவசாயிகளுக்கு சந்தேகம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

இரணைமடு நீர்ப்பாசனத் திணைக்களத்தால், கிளிநொச்சி குளத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் பராமரிப்பு வேலைகள், முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில், நீர்ப்பாசன கட்டுமானங்களுக்கு பாரிய அளவில் அபிவிருத்தி நிதிகள் கிடைக்காதநிலையில், பராமரிப்பு வேலைகள் மாத்திரமே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறன பாராமரிப்பு வேலைகள், உரியவாறு இனங்காணப்படாது மேற்கொள்ளப்படுவதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது.

கிளிநொச்சி குளத்தின் வான் பகுதியில், 'இபாட்' திட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டு பல மில்லியன் ரூபாய் நிதி செலவிடப்பட்டு, அதற்கான பாலம் அமைக்கப்பட்டதுடன் வான் பகுதியின் மண்ணரிப்பு ஏற்படாதவாறு கொங்கிறீட் இடப்பட்டதுடன், சமாந்தரமாக கொங்கிறீட் வீதியும் காணப்படுகின்றது.

இந்த நிலையில், கணேசபுரம், குஞ்சுபரந்தன், பெரியபரந்தன், பன்னங்கண்டி, ஊரியான் போன்ற பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நீர்ப்பாசன பராமரிப்பு வேலைகள் பல உள்ள போதும், அவற்றை மேற்கொள்ளாது, கிளிநொச்சி குளத்தின் கீழ் பகுதியில், ஏற்கனவே பெருந்தொகை நிதி செலவிட்டு அபிவிருத்திகளை செய்த அதேபகுதியில், வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை, விவசாயிகள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தி உள்ளது.

இந்த விடயம் தொடர்பாக, கிளிநொச்சி பிரதி நீர்பாசனத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு வினவியபோது, இது தொடர்பான விவரங்களை இரணைமடு நீர்பாசன பொறியியலாளரிடம் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்த நிலையில், இரணைமடு நீர்ப்பாசன பொறியியலாளரை பல தடவைகள் தொடர்பு கொள்ள முற்பட்ட போதும் அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை.

வன்புணர்ந்து சிறுமியை கர்ப்பமாக்கிய

## முதியவரின் விளக்கமறியல் நீடிப்பு

■ எம். றொசாந்த்

பதின்ம வயதுச் சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வயோதிபரின் விளக்கமறியலை இம்மாதம் 21ஆம் திகதிவரை நீடித்து, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் (10) உத்தரவிட்டது.

"விசாரணைகள் நிறைவடையவில்லை. எனவே, என்ன நடந்தது என்று விசாரணைகளின் போக்கில் அறியவரும். அதற்கு பின்னர் சந்தேக நபரை பிணையில் விடுவிப்பது தொடர்பில் ஆராயலாம்" என்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ ஆனந்தராஜா கட்டளை வழங்கினார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இருபாலையில், பதின்ம வயதுச் சிறுமி வயோதிபரால் வன்புணர்வுக்கு உள்ளாகி, கர்ப்பமாகி உள்ளார் என்று சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், விசாரணைகளை முன்னெடுத்திருந்த சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள், கோப்பாய் பொலிஸாருக்கும் அறிவித்திருந்தனர்.

கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட வயோதிபர் வெள்ளிக்கிழமை (07) யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கவும் சிறுமியை தாயாரின் பாதுகாப்பில் வைத்திருக்கவும் நீதிமன்றம் கட்டளையிட்டது.




## உணவு பாதுகாப்புக்கும் வருமான மேம்பாட்டுக்குமான திட்டம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, அம்பாள் நகர், கனகாம்பிகை குளம் ஆகிய பகுதிகளில் 37.5 ஏக்கர் வரையான நிலங்களில், உணவு பாதுகாப்புக்கும் வருமான மேம்பாட்டுக்குமான சிறுதானிய மற்றும் விவசாய செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'றகமா' நிறுவன நிதியுதவியுடன் கிராமசக்தியின் 150 விவசாயிகளுக்கு, அவர்களது சொந்தக்காணியில் கால் ஏக்கர் நிலப்பரப்பில் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் சிறுதானியம், மரக்கறி விதைகள், விவசாய உபகரணங்கள் என்பன வழங்கிவைக்கப்பட்டன.

திருவையாறு, கனகாம்பிகை குளம், அம்பாள்நகர் ஆகிய கிராமங்களை இணைத்து, அம்பாள் நகர் கிராம பொதுநோக்கு மண்டபத்தில் கரைச்சி பிரதேச செயலாளர் தலைமையில், வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

## 'எனது மகன் எனக்கு வேண்டாம்'

### மகனை பொலிஸில் ஒப்படைத்த தாய்

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணம், சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட பகுதியில் வசிக்கும் தாய், தனது 15 வயது மகன் போதைப்பழக்கத்துக்கு அடிமையாகியமையால், மகனை தன்னால் பராமரிக்க முடியவில்லை எனக் கூறி, 'எனது மகன் எனக்கு வேண்டாம்' என எழுதிய கடிதத்துடன் தனது மகனையும் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

இதையடுத்து, பொலிஸாரால் குறித்த சிறுவன், சிறுவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதை அடுத்து, சிறுவனை அரச சான்று பெற்ற அச்சுவேலி நன்னடத்தை பாடசாலையில் அனுமதிக்குமாறு,நீதிமன்று உத்தரவிட்டதற்கு அமைய, சிறுவன் நன்னடத்தை பாடசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

## வவுனியாவில் கனமழை

■ க. அகரன்

வவுனியாவில் நேற்றுமுன்தினம் 57.02 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வவுனியா வளிமண்டலவியல் திணைக்கள அவதானிப்பாளர் தா.சதானந்தன் தெரிவித்துள்ளார்.

திங்கட்கிழமை (10) காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையான காலப்பகுதியில் 57.02 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. பிற்பகல் இரண்டு மணிக்கு பின்னர் பெய்த கனமழை காரணமாக, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருந்தது. இக்காலப்பகுதியில், மாலை வேளையில் மழையுடன் இடி, மின்னல் தாக்கம் அதிகரிக்கும் என்பதால், பொது மக்கள் மிகுந்த அவதானமுடன் செயற்படுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில்

# பெரும் போகம் ஆரம்பம்

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும் போகச் செய்கைக்கான ஆரம்பக் கூட்டங்கள் திங்கட்கிழமை (10) முதல் மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைவாக மண்முனை மேற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட உன்னிச்சை, நீர்ப்பாசனத் திட்டங்கள், ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவில் உறுகாமம், கித்துள்வெவ, வெலிகாகண்டி நீர்ப்பாசனத் திட்டங்களுக்கான கூட்டங்கள், மண்முனை மேற்கு, ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகங்களின் மாநாட்டு மண்டபங்களில் குறித்த பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்களின் ஏற்பாட்டில் நடைபெற்றுள்ளன.

இக்கூட்டங்களின் போது, பெரும்போக விவசாய செய்கைக்கான திகதி எதிர்வரும் 20 திகதி எனத் தீர்மானிக்கப்பட்டதுடன், அந்தந்த விவசாய பிரதேசங்களின் திட்ட முகாமைத்துவக் குழுக்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய, வயற்காணி உழுதல், விதைப்பு தொடங்குதல், வேலி அடைத்தல், கால்நடைகள் அகற்றல், நீர் முகாமைத்துவம் உள்ளிட்ட அனைத்து விடயங்களுக்கான தீரமானங்களும் இதன்போது நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன் போது வங்கி கடன்கள், கால்நடைப் பிரச்சினை, யானைப் பிரச்சினைகள், காடுகள் அழிப்பு, கடந்த சிறுபோகத்தில் விவசாயிகள் எதிர்கொண்ட பிரச்சினைகள், பெரும்போகத்தில் விவசாயிகள் எதிர்நோக்கவுள்ள பிரச்சினைகள், விவசாயிகளுக்கான மேம்பாட்டுத்திட்டங்கள், நீர்ப்பாசனம், நெல் கொள்வனவு, உரத்தின் விலையை நிர்ணயித்தல், சேதனப்பசளை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

## 500 குடும்பங்களுக்கு வீடுத்தோட்ட உதவி

■ அ. அச்சுதன்



திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குச்சவெளி, பட்டணமும் சூழலும், மூதூர்,தம்பலகாமம்,கிண்ணியா ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் வாழும், பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நிலையில், வீட்டுத் தோட்டம் செய்வதற்கு உதவி கோரிய 500 வறிய குடும்பங்களுக்கு வீட்டுத்தோட்டம் செய்வதற்குரிய நாற்றுகளையும் விதைகளையும் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் திங்கட்கிழமை (10) வழங்கியது.

திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் இந்த உதவிகளை வழங்கி வைத்தார். வீட்டுத் தோட்டம் செய்வதற்கான நாற்றுகளையும் விதைகளையும் வழங்குவதற்கான அனுசரணையை, கனடாத் திருகோணமலை நலன்புரிச் சங்கம் வழங்கியிருந்தது.

## வாழைச்சேனை கடதாசி ஆலைக்கு இராஜாங்க அமைச்சர் விஜயம்

■ எம்.எம் அஹமட் அனாம்



வாழைச்சேனை கடதாசி ஆலைக்கு திங்கட்கிழமை (10) மாலை கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க விஜயம் மேற்கொண்டிருந்தார்.

ஆலையில் உற்பத்தி தொடர்பாகவும், குறைபாடுகள் தொடர்பாகவும் நிர்வாகிகளுடன் கலந்துரையாடியதுடன் ஊழியர்களின் தேவைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

அதன்பின்னர் கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது: உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் போக்குவரத்து பிரச்சினையை தீர்ப்பதற்கு, ஆலையில் பழுதடைந்த நிலையில் உள்ள அம்புலன்ஸ் வண்டியை திருத்தி, ஊழியர்கள் யன்படுத்த வழங்குவதாகவும் ஆலையின் உற்பத்தியை அதிகரிக்கும் பட்சத்தில், 25 நாள்களுக்கு மேல் கடமையாற்றும் ஊழியர்களுக்கு 5,000 ரூபாய் மேலதிக கொடுப்பனவும், நாளாந்த ஆயிரம் ரூபா சம்பளத்துடன் 350/= சேர்த்து நாளாந்த சம்பளமாக 1,350.00 ரூபா வழங்கவுள்ளதாகவும் வாக்குறுதி வழங்கினார்.

காத்தான்குடி பள்ளிவாயல் சம்மேளனத்தின்

## தலைவரின் வீட்டில் திருட்டு

■ எம்.எஸ்.எம் நூர்தீன்



காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் தலைவரும் காத்தான்குடி நகர சபை உறுப்பினருமான றஊப் ஏ மஜீத்தின் காத்தான்குடி கடற்கரையிலுள்ள வீடு உடைக்கப்பட்டு, ஜெனரேட்டர், பித்தாளையிலான புராதன பொருள் (கழுகு) என்பன திருடப்பட்டுள்ளன.

சம்பவத்தை விசாரணை செய்து வந்த காத்தான்குடி பொலிஸார், திருடிய பொருட்களை சந்தேக நபர் விற்பனை செய்ய முற்பட்டபோது, சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறியின் ஆலோசனையின் பேரில் காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு அதிகாரி ஏ. எஸ் .எம் ரஹீம் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட விசாரணையை யடுத்து மேற்படி சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மட்டு. நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

டெங்கு குறித்து

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை

■ எம்.எஸ்.எம். ஹனீபா, நூருல் ஹுதா உமர்



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஐ.எல்.எம் றிபாஸ் நேற்று (11) தெரிவித்தார்.

பருவ மழை பெய்ய ஆரம்பித்துள்ளதால் டெங்கு நுளம்பு பரவக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும், அண்மைக்காலமாக டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு வருவதாகவும் பொது மக்கள் மிக அவதானமாக செயற்படுமாறும் தெரிவித்தார்.

நுளம்பு உருவாகாமல் தடுப்பதற்கு சுற்றுப் புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ளல், அவற்றின் வதிவிடத்தை முற்று முழுதாக அழித்தல், என்பன முக்கியமானது.

டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான வெற்றுக்காணிகளை வைத்திருப்பவர்கள் இரண்டு வார காலத்துக்குள் துப்புரவு செய்ய வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

அத்துடன், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கான வழிகாட்டல் ஆவணம் திங்கட்கிழமை (10) வெளியிட்டு வைக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனைக்கமைய தொற்று நோய்த்தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ.சீ.எம் பசாலியின் ஏற்பாட்டில் பூச்சியியல் உத்தியோகத்தர் கே.ஏ ஹமீட் மற்றும் குழுவினர் இணைந்து இந்நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

## சகவாழ்வும் சௌஜன்யமும்

■ நூருல் ஹுதா உமர்

சர்வதேச உலக உள நல தினத்தை முன்னிட்டு, பாதிக்கப்பட பெண்களுக்கான அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் எஸ்.டீ நஜீமியாவின் ஏற்பாட்டில், இறக்காமம் பிரதேச செயலக பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவின் ஒருங்கிணைப்பில் 'இனங்களுக்கிடையில் சக வாழ்கை கட்டியெழுப்புவோம்' எனும் கருப்பொருளின் விழிப்புணர்வு வீதி நாடகம் திங்கட்கிழமை (10) பிரதேச செயலக முன்றலில் இடம்பெற்றது.

இலங்கையில் வாழும் மக்களின் உள ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்க்கு இனங்களுக்கு இடையிலான சகவாழ்வும் ஒற்றுமையும் அவசியமாகும். இலங்கை சமூகத்தில் வேரூன்றியுள்ள இனஅடிப்படையிலான சிந்தனையை இல்லாமல் செய்து, மக்கள் மத்தியில் இன சௌஜன்யத்தை கட்டியெழுப்புவதே இந்த வீதி நாடகம் மக்களுக்குச் சொல்லும் செய்தியாக அமைந்திருந்தது.













# மரக்கன்றுகள் வழங்கி வைப்பு

Lion's club 306 B2 Ocean city இன் ஆதரவுடன் இலவச மூக்கு கண்ணாடி மற்றும் மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு, இங்கிரிய கிறிஸ்து நாதர் தேவாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்றது.

பேராதனை பல்கலைக்கழகத்தில்

# 169 மாணவர்களின் கல்வியை பறித்த 'பகடி'

ஷேன் செனவிரத்ன

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் இடம்பெறும் பகடிவதை காரணமாக, 2000ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 169 மாணவர்கள் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கையிலிருந்து விலகியுள்ளனர் என கலைப்பீடத்தின் பீடாதிபதி கலாநிதி பிரபாத் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தப் பகடிவதை காரணமாக, வருடாந்தம் 15- 16 மாணவர்கள் பல்கலைக்கழக கல்வியை இடையிலேயே நிறுத்தி விடுகின்றனர். இது அந்த மாணவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு துயரத்தை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

இவ்வாறு கல்வியை இடைநிறுத்தி விட்டுச் சென்ற மாணவர்கள் எழுதிய கடிதங்கள் எம்மிடம் உள்ளன. சிலர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். அண்மையில் தன்னுயிரை மாய்த்துக்கொண்ட மாணவன் கூட, முதலாம் வருடத்தில் அதிகமாக பகடிவதைக்கு உள்ளானவர் என்றார். எனவே, பகடிவதைக்கு எதிரான மாணவர்களைத் தாக்க வேண்டாம் என வேண்டுகோள் விடுப்பதாகத் தெரிவித்த அவர்,




அவ்வாறு தாக்குதலில் ஈடுபடும் மாணவர்களுக்கு எதிராக, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் போது, அவர்களுக்கு சார்பாக எவரும் முன்னிற்க வேண்டாம் என தாம் மாணவர்கள் சங்கத்திடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.




# பிரியாவிடையும் நூல் வெளியீட்டு விழாவும்

நடராஜா மலர்வேந்தன்

தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமோ கற்கை நெறியின் பதுளை பிராந்திய நிலைய 2020/2021 ஆம் கல்வியாண்டு ஆசிரிய மாணவர்களின் பிரியாவிடை மற்றும் 'ஊவாவின் ஊற்று' நூல் வெளியீட்டு விழாவும் பாரதி தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

நிலைய இணைப்பாளர் பி. ஆனந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், பிரதம அதிதியாக தேசிய கல்வி நிறுவகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் பாடநெறியின் தேசிய இணைப்பாளர் எஸ். ஷிபானும் சிறப்பு அதிதியாக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதிஎஸ். கருணாகரனும் கலந்து கொண்டனர்.

# பயணச்சீட்டுகள் இன்றி பயணிப்பதாக குற்றச்சாட்டு

இரா.யோகேசன்

மலையகத்தில் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களில் குறுகிய தூரங்களில் பயணிக்கும் பயணிகளுக்கு பயணச்சீட்டு வழங்கப்படுவதில்லை என பயணிகள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

குறிப்பாக தலவாக்கலை, பொகவந்தலாவ, மஸ்கெலியா, கண்டி, ஹட்டன் போன்ற பிரதான வீதிகளில் சேவையில் ஈடுபடும் பஸ்களிலேயே இவ்வாறு பயணச்சீட்டுகள் வழங்கப்படுவதில்லை என்றும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறான நேரங்களில் அதிகாரிகளால், வீதிகளில் திடீரென பயணச்சீட்டு பரிசோதிக்கப்படும் போது, பயணிகளே அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, இது விடயத்தில் உரிய தரப்பினர் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வலையில் சிக்கி உயிரிழந்த சிறுத்தையின் உடலம் மீட்பு

ஆ.ரமேஸ்

ஹய்பொரஸ்ட், காவத்தை தோட்டத்தில் வலையில் சிக்கி உயிரிழந்த நிலையில் சிறுத்தை ஒன்றின் உடலம் நேற்று (11) காலை மீட்கப்பட்டுள்ளது.

காவத்தை தோட்டத்திலுள்ள விவசாய காணி ஒன்றின் பற்றை காட்டுக்கு அருகிலிருந்து சிறுத்தையின் உடலம் மீட்கப்பட்டதென ஹய்பொரஸ்ட் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த சிறுத்தை ஏழு அடி நீளம் கொண்டதாகவும் சுமார் 150 கிலோ கிராம் நிறை கொண்ட ஆண் சிறுத்தை எனவும் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த காலங்களில் உயிரிழந்து மீட்கப்பட்ட சிறுத்தைகளில் இதுவே அதிக எடை கொண்ட சிறுத்தை எனவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினார்கள்.

மரக்கறிகளை



பன்றிகளிமிருந்து பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட கம்பி வலையில் சிக்கி, கழுத்து இறுகியே சிறுத்தை உயிரிழந்துள்ளது.



# அடிக்கல் நாட்டப்பட்டது

ஷங்கீதன்

சற்குரு சரவணபாபா சுவாமிகளின் ஜனன தினத்தை முன்னிட்டு, கோட்லோஜ் தோட்டத்தில் முருகன் ஆலயத்துக்கு நேற்று (11) அடிக்கல் நாட்டப்பட்டது.

நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன், லண்டன் சற்குரு சரவணபாபா சுவாமிகளின் பக்தர் நிமலன் அவருடைய தாயார் திருமதி சண்முகநாதன் உள்ளிட்ட பலர் இணைந்து அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

இங்கு அமையப்பெறவுள்ள 25 அடி உயரமான முருகன் சிலையை, இரத்தினபுரி சேர்ந்த பிரபல சிற்பி சிவகுமாரன் வடிவமைக்கவுள்ளார்.

# 42 மாணவர்கள் திடீர் சுகவீனம்

## விசாரணைகள் ஆரம்பம்

எஸ். கணேசன்



திடீர் சுகவீனம் அடைந்த 42 மாணவர்கள் கொட்டகலை வைத்தி யசாலையில் நேற்று (11) காலை அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

பத்தனை தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த 42 மாணவர்கள் திடீர் சுகவீனமுற்றமை தொடர்பில், கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

காய்ச்சல், மயக்கம் போன்ற அறிகுறிகளுடன் தரம் 6 தொடக்கம் 11ஆம் தரம் வரை கல்வி கற்கும் 13 மாணவர்களும் 29 மாணவிகளுமே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் சில மாணவர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ள நிலையில், சில மாணவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் இவர்களின் நிலை பாரதூரமாக இல்லை என்றும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்துள்ளன.

மாணவர்கள் சிலருக்கு நேற்றும் (11) காய்ச்சல், மயக்கம் போன்ற நோய் அறிகுறிகள் தென்பட்டதாகவும், இதனால் அவர்கள் நேற்று முன்தினம் (10) மாலையும் கொட்டகலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தெரணியகலையில் திடீர் சோதனை

என்.ஆராச்சி

தெரணியகல பொலிஸாரால் நேற்று முன்தினம் (10) இரவு 10 மணியளவில், வாகனங்கள் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. தெரணியகல வைத்தியசாலைக்கு முன்பாக வைத்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அதிகளவு சத்தத்துடன் வாகன ஒலியை எழுப்பிய வாகனங்கள், காப்புறுதி மற்றும் வருமானவரி பத்திரங்கள் அற்ற வாகனங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் 39 வாகன சாரதிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவித்தனர்.

அத்துடன் இதன்போது 300 வாகனங்கள் பரிசோதிக்கப்பட்டதுடன், 25 வாகன சாரதிகள் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

ஜப்பானின் பசுமை முறையைப் பயன்படுத்தி


# மலையகத்தில் மரக்கறி உற்பத்தி அறிமுகம்

ரஞ்சித் ராஜபக்ஷ

ஜப்பானில் மரக்கறி உற்பத்திக்காக வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட பசுமைத் திட்ட முறையை இந்நாட்டு விவசாயத்திற்கு அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை பொருளாதார மத்திய நிலைய ஒன்றிய சபையின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று (11) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், கடந்த நான்கு வருடங்களாக பல்வேறு



அனர்த்த நிலைமைகளுக்கு முகங்கொடுத்து, உரம் மற்றும் இரசாயனப் பற்றாக்குறையை விவசாயிகள் எதிர்நோக்க நேரிட்டுள்ள நிலையிலேயே, இந்தப் புதிய திட்டம் தொடர்பில் அறிவிக்கப்பட்டு உள்ளது. எனவே எதிர்வரும் நாள்களில் ஜப்பானின் பசுமைத் திட்ட பயிர்ச்செய்கை முறையை அறிமுகப்படுத்துவதற்கு தயாராகி வருவதாகவும் இம்முறையின் மூலம், காய்கறிகள் பயிரிட செலவிடப்படும் உரத்தின் அளவை பாதியாக குறைக்க முடியும் என்பதுடன், இந்த முறையை அமல்படுத்தினால், விவசாயிகளின் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்றார்.

# தேசிய கொள்கையின் அவசியத்தை உணர்த்தி நிற்கும் ஜனாதிபதி

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாங்கள் முன்னர் விமர்சித்திருந்தாலும், அவர் சரியான பாதையிலேயே தற்போது பயணிக்கின்றார். அவருக்கு மொட்டு ஆதரவளிக்கும்” என ‘ஒன்றாக எழுவோம் - களுத்துறையிலிருந்து ஆரம்பிப்போம்’ எனும் தொனிப்பொருளில், சனிக்கிழமை (08) நடைபெற்ற மக்கள் சந்திப்பில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஆற்றிய உரைக்குப் பின்னர், ஜனாதிபதிக்கு எதிரான விமர்சனங்கள் சூடுபிடித்துள்ளன.

“மொட்டுடன் இணைந்துள்ள ஜனாதிபதி, கொள்ளையர்களை இணைத்துக்கொண்டு கொள்ளை பயணத்தில் பயணிக்க முயல்கின்றார். அவருடன் இணைந்து பயணிக்க, நாங்கள் தயாரில்லை” என எதிர்க்கட்சியினர் கடுமையான சீற்றத்துடன் கூறிவருகின்றனர். இந்நிலையில், ராஜபக்ஷ குடும்பத்துக்கு விசுவாசமான 12 அடிமைகளின் பெயர்கள், அமைச்சுப் பதவிகளுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ், முறையான அமைச்சரவை நியமிக்கப்படவில்லை. இருப்பதை வைத்துக்கொண்டுதான் இழுத்துக்கொண்டு செல்கின்றார். அமைச்சுப்பதவிகளில் குளறுபடிகள் ஏற்படின், பாராளுமன்றத்தில் ஜனாதிபதியின் மீதான விசுவாசம் குறைவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. ஆகையால், அமைச்சரவையை நியமித்தல் மெதுவாக நகர்த்தப்படுகின்றது.

இந்நிலையில், ஆட்சி மாற்றம் ஏற்படும் போதெல்லாம், அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களில் விசுவாசத்தின் பெயரில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படும். கொள்கைகளும் மாற்றப்படும். நாடு தற்போது முகங்கொடுத்துக்கொண்டிருக்கும் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு இந்த மாற்றங்களும் அதற்கான பாரிய செலவுகளும் முக்கிய காரணங்களாகும்.

உலக நீரோட்டத்துடன் இணைந்து நீந்தவேண்டுமாயின், ஒருசில துறைகளில் மாற்றம் அவசியம். கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் அவ்வப்போது அதிரடியான மாற்றங்களைச் செய்யவேண்டும். ஏனைய துறைகளுக்கு தேசிய கொள்கையை வகுக்கவேண்டும். அதனூடாக தேவையில்லாத செலவுகளைக் குறைத்துக்கொள்ள முடியும்.

தேசிய கொள்கையை அமைத்தால் மட்டும் போதாது. அதில் மாற்றங்களை ஏற்படுத்தாத வகையில், காலவோட்டத்துக்கு ஏற்றவகையில் திருத்தங்களை மேற்கொள்ளும் வகையில் சட்டமாக்க வேண்டும். அதற்கு கட்சி பேதமின்றி ஒத்துழைப்பார்களா என்பது சந்தேகமே! ஒத்துழைத்தால் நாட்டை முன்னேற்றப் பாதைக்குள் கொண்டு செல்லலாம். இல்லையேல், இன்னும் பாரிய நெருக்கடியை சந்திக்கவேண்டிய நிலை ஏற்படும்.

ஆட்சிப்பீடத்தில் இருப்பவர்கள் தங்களுடைய தேவைக்கு ஏற்றவகையில், கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்தல், மிகவும் நெருங்கிய உறவினர்களை அமைச்சுகளின் முக்கிய பதவிகளுக்கு ஆகக்கூடிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுடன் நியமித்துக்கொள்ளுதல் போன்றவற்றை எல்லாம் தவிர்க்கும் சரத்துகளை, தேசிய கொள்கையில் உள்ளீர்க்க வேண்டும்.

ஓர் அமைச்சின் கீழ் எவ்வளவு சேவைகளை துரிதகதியில் முன்னெடுக்க முடியுமோ அதற்கேற்றவகையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். அத்துடன், ஊழல், மோசடிகளை செய்ததன் பின்னர், விசாரணைக்குழுக்களை அமைத்து நேரத்தையும் பணத்தையும் வீணடிக்காமல், அவற்றுக்கு முடிச்சுப்போடும் வகையிலும் தேசிய கொள்கையை நிறுவ வேண்டும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

உயிர் உள்ள போதுதான் உறவுகள் என்கின்றனர். அது பொய்! எமது உறவுகள், எங்கள் பரம்பரையினர் இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு இடம்பெற்ற அழிப்பில் எங்களை விட்டு ஏகினர்.

இந்தச் சோகம், எங்களை இன்னும் வாட்டுகின்றது. தமிழர்கள் முப்பது ஆண்டுகளாகத் தங்களது உரிமைகளுக்காகப் போராடினார்கள். தொடர்ந்து முப்பது ஆண்டுகளாக எந்த வசதிகளும் இல்லை. மின்சாரம், எரிசக்தி என எவையும் எமக்குக் கிடைக்கவில்லை. நடந்த கொடுமைகளைச் சொல்லி முடியாது.

கண்ணாடிப் போத்தலில், தேங்காய் எண்ணெயில், திரி அல்லது கடதாசி வைத்து, விளக்கு எரித்துப் படித்தார்கள். அந்த நிலையிலும் கல்வியை எமது மாணவர்கள் கைவிடவே இல்லை.

எந்த நேரமும் குண்டுச் சத்தங்கள்; அடிக்கடி மரணங்கள், மரண ஓலங்கள்; கோவில், தேவாலயங்கள் என எவற்றையும் பேரினவாதம் கண்டுகொள்ளவில்லை. பல தேவாலயங்களின் மீது குண்டுவீச்சு. வாகன வசதிகள் இல்லை. சைக்கிள் பயணங்கள்தான்! பயணமே பயங்கரம்.

ஆனால், எம்மவர்கள் சளைக்கவில்லை. விவசாயம் செய்தனர். போர்க்காலத்திலும் எங்களை நாங்கள் பார்த்துக்கொண்டோம்.

தற்போது என்ன நடக்கிறது? எமது நாட்டின் நிலையை உலகமே அறியும். அநியாயம் நிலைக்காது என ஆன்மிகம் சொல்லுகின்றது.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# முரட்டுத்தனத்தின் விளைவே ஜெனீவா பிரேரணை



எம்.எஸ்.எம் ஐயூப்

ஜெனீவாவில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது அமர்வில், கடந்த வியாழக்கிழமை (06) நிறைவேற்றப்பட்ட பிரேரணையில், புதிதாக ஒன்றுமே இல்லை என்றுதான் கூற வேண்டும்.

இந்தப் பிரேரணை, 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம், பேரவையின் 46 ஆவது அமர்வின் போது நிறைவேற்றப்பட்ட பிரேரணையை வலியுறுத்துகிறது. அந்தப் பிரேரணை, அதே அமர்வின்போது சமர்ப்பிக்கப்பட்ட மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகரின் அறிக்கையை அனுமதிக்கிறது.

அந்த அறிக்கையில்தான், இலங்கையில் மனித உரிமைகளை மீறியோருக்கு எதிராக, பயணத்தடையும் பொருளாதாரத் தடையும் விதிப்பது தொடர்பாக குறிப்பிடப்படுகிறது. அதேபோல், அவ்வாறானவர்களுக்கு எதிராக உறுப்பு நாடுகள், தத்தமது நீதிமன்றங்களில் வழக்குத் தொடர முடியும். எனவே, இம்முறையும் அந்த நடவடிக்கைகளையே பேரவை வலியுறுத்துகிறது எனலாம்.

இம்முறை, மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு ஆதரவாகவும் எதிராகவும் வாக்களித்த நாடுகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. 2021 மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக 22 நாடுகள் வாக்களித்த போதிலும், இம்முறை அந்த எண்ணிக்கை 20 ஆக குறைந்துள்ளது.

அதேபோல், இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளின் எண்ணிக்கை 11இலிருந்து 7 ஆக குறைந்துள்ளது. எனவே, பேரவையின் 47 உறுப்பு நாடுகளில் வாக்களிப்பில் கலந்து கொள்ளாத நாடுகளின் எண்ணிக்கை 14 இலிருந்து 20 ஆக இம்முறை அதிகரித்துள்ளது.

பிரேரணையை வாசிக்கும் போது, அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலை புலிகளுக்கும் இடையிலான போரின் போது இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்களை, மனித உரிமைகள் பேரவை மறந்துவிட்டதா என்ற சந்தேகமும் எழுகிறது.

ஏனெனில், நாட்டில் பொதுவாக ஏற்பட்டு இருக்கும் பொருளாதார நெருக்கடி, அடக்குமுறை போன்றவையே விசேடமாக அதில் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும், போர்க்காலத்தில் மிகப் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய சம்பவங்களும் புலிகளின் மனித உரிமைகள் மீறல்கள் என்பன மட்டுமே விசேடமாகக் குறிப்பிடப்பட்டு உள்ளன.

ஆயினும், பிரேரணையின்படி, இலங்கையில் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக, வெளிநாடுகள் நடவடிக்கை எடுப்பதாயின், போர்க்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கலாம். உண்மையிலேயே, இலங்கையில் மனித உரிமைகள் மீறல்கள் என்னும் போது, வெளிநாடுகளில் உள்ளோருக்கு அக்கால சம்பவங்களே ஞாபகத்துக்கு வருகின்றன.

பிரேரணையின் பிரகாரம், உறுப்பு நாடுகள் இலங்கையில் மனித உரிமைகளை மீறியோருக்கு எதிராக, தத்தமது நாடுகளில் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்; பயணத்தடை மற்றும் பொருளாதாரத் தடைகளை விதிக்க முடியும் என்று இருந்த போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கட்டாயம், எந்தவொரு நாட்டுக்கும் இல்லை. எனவே, பிரேரணை எந்தளவுக்குப் பயன்தரும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற அமைப்புகள் சந்தேகம் எழுப்பி இருந்தன.

எனினும், ஏற்கெனவே சில நாடுகள் இலங்கையில் மனித உரிமைகளை மீறியோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தயாராக இருப்பதாக, ஞாயிற்றுக்கிழமை (09) வெளியான ‘சண்டே டைம்ஸ்’ பத்திரிகையில் செய்தி பிரசுரமாகியுள்ளது. அச்செய்தியின்படி, மூன்று இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக, கனடா பயணத்தடை விதிக்கப்போகிறது. அதையடுத்து, ஐரோப்பிய ஒன்றியத்தின் சில நாடுகளும் அவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கத் தயாராகின்றன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகளை மீறியோருக்கு எதிராக, வெளிநாடுகளில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான தகவல்கள், சாட்சியங்களை திரட்டி, பகுப்பாய்வு செய்து பாதுகாக்கும் பொறிமுறையும் 2021 வருட பிரேரணை மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதிலும், பெரும்பாலும் போர்க்கால சம்பவங்கள் தொடர்பான தகவல்களும் ஆதாரங்களுமே இருக்கலாம் என ஊகிக்க முடியும்.

இந்தப் பொறிமுறையைப் பற்றி, இலங்கை அரசாங்கம் மிகவும் குழப்பம் அடைந்துள்ளதாகத் தெரிகிறது. இந்தப் பொறிமுறையைப் பற்றிக் குறிப்பிடும், இவ்வருட பிரேரணையின் எட்டாவது வாசகத்தை, வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரி அடிக்கடி குறிப்பிட்டுப் பேசுவதன் மூலம் அது தெரிகிறது. தகவல் திரட்டும் பொறிமுறையின் மூலம், பிரிவினைவாதிகளுக்கு எதிராகப் போராடிய போர் வீரர்களை வேட்டையாட, முயன்று வருவதாக அவர் கூறுகிறார்.

இது, மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் இருந்து, பாடப்படும் பழைய பல்லவியாகும். அதேபோல், ‘போர் வீரர்களை வேட்டையாடுவது’ என்ற சொற்பிரயோகத்தைக் கொண்டு, சிங்கள மக்களின் இன உணர்வைத் தூண்டி, மக்கள் ஆதரவைத் தேட முயல்வதேயாகும்.

மனித உரிமைகள் என்னும் போது, படையினர் வடக்கு - கிழக்கில் செய்தவற்றை மட்டும் குறிப்பிடவில்லை. புலிகள் செய்தவற்றையும் அரச படைகள் மற்றும் பொலிஸார் ஆர்ப்பாட்டங்களின் போது செய்தவற்றையும் மனித உரிமைகள் பேரவை அதில் உள்ளடக்குகின்றது. அதேவேளை, இம்முறை பொருளாதார குற்றங்கள் மூலம், மனித உரிமைகளை மீறியோர் பற்றியும் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகரின் அலுவலகம், இவ்வாறான தகவல் திரட்டும் பொறிமுறையை ஆரம்பிப்பதைப் பற்றி, அரசாங்கம் அவ்வளவு அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. சம்பவங்கள், இலங்கையிலேயே இடம்பெற்றிருக்க வேண்டும். அவற்றைப் பற்றி பாதுகாப்புத் துறையினர் நிச்சயமாக தகவல்களைத் திரட்டி வைத்திருக்க வேண்டும்.

உயர்ஸ்தானிகரின் அலுவலகம் திரட்டியிருக்கும் தகவல்கள் பொய்யானவை என்றால், எதிர்க்காலத்தில் இலங்கையர்களுக்கு எதிராக அவற்றைப் பாவித்து, வெளிநாடுகளில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் போது, அரசாங்கம் தம்மிடம் இருக்கும் தகவல்களைக் கொண்டு, உயர்ஸ்தானிகரின் அலுவலகத்தின் தகவல்களை நிராகரிக்க முடியும்.

“வெளிநாட்டுக் கொள்கையின் தோல்வியே இந்தப் பிரேரணை” என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூறியிருக்கிறார். “அரசாங்கம் கடந்த காலத்தில், மனித உரிமைகள் பேரவைக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறியதன் விளைவே, தற்போதைய பிரேரணை” என்று முன்னாள் வெளிநாட்டு அமைச்சரும் தற்போது ஆளும் கட்சியிலிருந்து விலகி ‘டலஸ் அழகப்பெருமவின் குழு’வில் சேர்ந்து இருப்பவருமான பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் கூறியிருக்கிறார். இந்த இரண்டு கருத்தும் உண்மையே! ஆனால், அவர்கள் இருவரும் வேறு நோக்கங்களை மனதில் வைத்தே, இந்தக் கருத்தை வெளியிடுகிறார்கள்.

மனித உரிமைகள் பேரவையின் தலைவர்களுடன் அல்லது வல்லரசு நாடுகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, இந்தப் பிரேரணைகளை தடுத்து இருக்கலாம் என்பதே நீதி அமைச்சரின் வாதமாக இருக்கிறது. அதாவது, இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளனவா, இல்லையா என்பதைப் பற்றி, அவருக்கு அக்கறை இல்லை. மீறப்பட்டு இருந்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவது ஒரு புறமிருக்க, பாதிக்கப்பட்டவர்களுக்காக நீதி கோரும் நாடுகள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்களுடன் பேசி, பிரச்சினைகளைச் சமாளித்து இருக்க வேண்டும் என்பதே அதன் அர்த்தமாகும். அதுதான் நீதி அமைச்சரின் நீதியாகும்.

மஹிந்தவினதும் கோட்டாபயவினதும் காலத்தில், வெளிநாட்டு அமைச்சராக இருந்த ஜீ.எல் பீரிஸ், மனித உரிமைகள் பேரவைக்கு தான் வழங்கிய வாக்குறுதிகளை மீறியதன் விளைவே, தற்போதைய பிரேரணை என்று கூறுகிறார். அது முற்றிலும் உண்மையே!

போர் முடிவடைந்து ஒரு வாரத்தில், அதாவது 2009 மே மாதம் 23ஆம் திகதி, அப்போதைய ஐ.நா செயலாளர் நாயகம் பான் கி மூன் இலங்கைக்கு விஜயம் செய்தார். 26ஆம் திகதி அவர் திரும்பிச் செல்லும்முன், அவரும் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

போர்க்காலத்தில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக, பொறுப்புக் கூறல் விடயத்தில் இலங்கை ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என, பான் கி மூன் அதில் நம்பிக்கை வெளியிட்டார். அதில் மஹிந்தவும் கையொப்பமிட்டார். அதுவே, மனித உரிமைகள் விடயத்தில், இலங்கை அரசாங்கம் எழுத்து மூலமாக, சர்வதேசத்துக்கு வழங்கிய முதலாவது வாக்குறுதியாகும்.

அடுத்த நாள், இலங்கை தூதுக்குழு ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் பிரேரணையொன்றை சமர்ப்பித்தது. அதில், இந்தக் கூட்டறிக்கை மீண்டும் வலியுறுத்தப்பட்டது. இலங்கை விடயத்தில், மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது பிரேரணை அதுவேயாகும். அதற்கு ஆதரவாக 29 நாடுகள் வாக்களித்தன. அதுவே இலங்கைக்கு ஆதரவாக மிகப் பெரும் ஆதரவை பெற்ற பிரேரணையாகும்.

அதையடுத்து 2012, 2013. 2014, 2015, 2017, 2019, 2021, 2022 ஆம் ஆண்டுகளில் இலங்கை தொடர்பாக, பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இலங்கை அரசாங்கம், அவை அனைத்தையும் நிராகரித்த போதிலும், அவற்றில் இலங்கையின் பொறுப்புகளாகக் குறிப்பிடப்பட்ட விடயங்களை நிறைவேற்றுவதாக ஏற்றுக் கொண்டது. ஆனால் அரசாங்கம், கடந்த 13 ஆண்டுகளில் அவற்றில் மிகச் சிலவற்றை தவிர, ஏனையவற்றறை நிறைவேற்றவில்லை. வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று கூறும் ஜி.எல் பீரிஸ்தான், 2009 ஆம் ஆண்டிலிருந்து, கடந்த 13 ஆண்டுகளில் ஆறு ஆண்டுகள் வெளிநாட்டு அமைச்சராக இருந்தார். எனவே, ஆரம்பத்தில் மனித உரிமைகள் மீறல் சம்பவங்களைப் பற்றி, “நீங்களே விசாரணை செய்து காட்டுங்கள்” என்று கூறிய சர்வதேச சமூகம், இப்போது தாமாக முன்வந்து, அவற்றை விசாரிப்பதாகக் கூறுகிறது.

## கடிதங்கள்

### கிளிநொச்சி மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்த கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்று வரும் கசிப்பு உற்பத்தியையும் விற்பனையையும் கட்டுப்படுத்தி, இளைய தலைமுறையினரைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை, சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் சமூக நலன்விரும்பிகளும் உடனடியாக எடுக்குமாறு, பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில், கடந்த பல ஆண்டுகளாக, கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் இளவயதினர் மதுப்பாவனைக்கு அடிமையாவதுடன், மாணவர்களும் மதுவுக்கு அடிமையாகி வருகின்ற போக்கு அதிகரித்துச் செல்கின்றது.

இவ்வாறு, கசிப்பு மற்றும் போதைப்பொருட்களைப் பாவிப்பவர்கள், போதையில் பல்வேறு குற்றச்செயல்களிலும் ஈடுபடுகின்றார்கள். முக்கியமாக, குடும்ப பிணக்குகள் ஏற்படுகின்றன.

எனவே, கசிப்பு உற்பத்தியையும் விற்பனையையும் மற்றும் போதைப்பொருள் விநியோகம், பாவனைகளைத் தடுத்து, எதிர்காலத்தில் ஆரோக்கியமானதும் வினைதிறனானதுமான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு, ஏற்ற வழிவகைகளை செய்யவேண்டும் என, பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யது பாஸ்கரன்




# அமைச்சரவை முடிவுகளில் சில...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடிய வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களில் சில...

### 01. காணித்துண்டுகளை ஒதுக்கி வழங்கல்

கைத்தொழில் மேம்படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தாபிக்கப்பட்டுள்ள பிராந்திய கைத்தொழில் சேவைகள் குழு மற்றும் கைத்தொழில் அமைச்சின் கீழுள்ள கருத்திட்ட மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைக்கமைய பிராந்திய கைத்தொழில் அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட முதலீட்டாளர்கள் 16 பேருக்கு 35 வருட நீண்டகால குத்தகையின் அடிப்படையில் 16 காணித்துண்டுகளை ஒதுக்கி வழங்குவதற்காக கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 02. குத்தகையின் அடிப்படையில் வழங்கல்

நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இல. 09 காரைத்தீவு வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள காணி, வாடிவீடுகள் அபிவிருத்திக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 30 வருட குத்தகையின் அடிப்படையில் கிராண்ட் மவுன்டன் ஹோட்டல் கம்பனிக்கு வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, ஏற்புடைய நிபந்தனைகளுக்கமைய குறித்த காணியை கிராண்ட் மவுன்டன் (தனியார்) கம்பனிக்கு வாடிவீடுகள் அபிவிருத்திக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக முப்பது (30) வருடங்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 03. பாராளுமன்ற அனுமதிக்காக சமர்ப்பித்தல்

திறந்த கணக்கு அடிப்படையில் கொடுப்பனவு முறைமையின் கீழ் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக, வெளிநாடுகளில் பணிபுரிகின்ற இலங்கையர்களால் எமது நாட்டுக்கு பண அனுப்பலை ஊக்குவிக்கும் நோக்கில் 2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய, பால்மா, சிவப்பு பருப்பு உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்கள், கோழி உணவு உற்பத்திக்கு அவசியமான மூலப்பொருட்கள் திறந்த கணக்கு/ சரக்குக் கணக்கு அடிப்படையில் கொடுப்பனவு முறைமையின் கீழ் இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்குவதற்கான அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களை ஊக்குவிக்கும் முறையாக அவர்களுக்கு முழுமையான இலத்திரனியல் மோட்டார் வாகன இறக்குமதி செய்வதற்கு இயலுமாகுமாறு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளன.

அதற்கமைய, மேற்குறிப்பிட்ட இறக்குமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கிகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 04. குடியியல் வழக்கு சட்டக்கோவை திருத்தம்

வழக்கொன்றின் தரப்பினர்களுக்கு வழக்குத் தீர்ப்பின் அல்லது வழங்கப்பட்ட தீர்ப்புக் கூற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை வழங்குவதற்கு ஏற்புடைய வகையில் குடியியல் வழக்கு சட்டக்கோவையின் (101 ஆம் சட்டவாக்கம்) (205 ஆம் உப பிரிவு) திருத்தம் செய்வதற்காக சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக 2022.01.18 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்பதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கிகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 05. புதிய சட்டத்தை அறிமுகம் செய்தல்

இலங்கையின் எழுத்து வடிவிலான வரலாறு மற்றும் கலாசார தனித்துவ அடையாளங்களை எடுத்தியம்பும் பொது அதிகார சபைகளில் சாட்சிபூர்வமான ஆவணங்கள் மற்றும் தனிப்பட்ட ஆவணங்களை நேர்த்தியான வகையில் முகாமைத்துவம் செய்தல், பாதுகாத்தல் போன்றன தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள சட்டபூர்வமான காப்புகளுக்குரிய 1839 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பத்திரிகைக் கட்டளைச் சட்டம், 1885 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அச்சக மற்றும் வெளியீட்டாளர்களுக்கான கட்டளைச் சட்டம், 1902 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க அச்சக கட்டளைச் சட்டம் போன்ற 03 சட்டங்கள் இத்திணைக்களத்தால் அமல்படுத்தப்படுகின்றது.

அதற்கமைய, குறித்த ஆவணங்களின் சட்டபூர்வ பிரதிகள் தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்தின் பொறுப்பில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. உலகளாவிய ரீதியில் 131 நாடுகளுக்கிடையே புராதன சட்டபூர்வ காப்புச் சட்டம் இலங்கையில் காணப்படுவதுடன், சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் சட்டத்திருத்தம் செய்யப்பட வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2018 ஆம் ஆண்டில் குறித்த விடயஞ்சார் நிபுணத்துவக் குழுவால் ஏற்புடைய தரப்பினர்களின் கருத்துகளைக் கேட்டறிந்து தயாரிக்கப்பட்டுள்ள ஆரம்ப சட்டமூலத்தை அடிப்படையாகக் கொண்டு சட்டபூர்வ காப்புக்கள் சட்டத்தை இலங்கையில் அறிமுகப்படுத்துவதற்காக சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 06. இழுவைக் கப்பல் கொள்வனவு

கொழும்பு துறைமுகத்தில் தற்போது சிறந்த நிலையில் தொழிற்படும் 07 இழுவைக் கப்பல்கள் இருப்பதுடன், எதிர்காலத் தொழிற்பாடுகளுக்காக 80 தொன் கொள்ளளவு கொண்ட மேலுமோர் இழுவைக் கப்பல் கொள்வனவு செய்யப்பட வேண்டுமெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, சர்வதேச போட்டி விலைமனுக்கோரல் செயன்முறையைக் கடைப்பிடித்து இழுவைக் கப்பலை கொள்வனவு செய்வதற்குத் தேவையான படிமுறைகளை மேற்கொள்வதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 07. ஒப்பந்தம் வழங்கல்

தொழில்நுட்பவியல் பாடவிதானத்திற்கு தேசிய கல்வியியல் கல்லூரி கொரிய அரசின் உதவி மற்றும் உள்ளூர் நிதியத்தின் கீழ் குளியாப்பிட்டி, நாரங்கல்ல பிரதேசத்தில் அமைப்பதற்கு 2017.01.18 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனாலும், பல்வேறு காரணங்களால் 2021 நவம்பர் மாத இறுதிவரை கொரிய சர்வதேச ஒத்துழைப்புகள் தொடர்பான முகவர் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த கட்டுமானங்களை ஆரம்பிக்க முடியாது போயுள்ளது. குறித்த கட்டுமானப் பணிகளை நேரடி ஒப்பந்தமாக பொறியியல் பணிகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்திற்கு ஒப்படைப்பதற்கு கொரிய சர்வதேச ஒத்துழைப்புகள் தொடர்பான முகவர் நிறுவனம் உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, குறித்த ஒப்பந்தத்தை பொறியியல் பணிகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்திற்கு ஒப்படைப்பதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 08. பதிலீட்டு கொடுப்பனவை அதிகரித்தல்

இலங்கை உப அஞ்சல் நிலையப் பொறுப்பதிகாரிகள் சேவை யாப்புக்கு அமைய உப அஞ்சல் நிலைய பெண் பொறுப்பதிகாரியால் தமது மகப்பேற்றின் போது தமது செலவில் பதில் பணிகளுக்கு ஒருவரை கடமையில் ஈடுபடுத்துவதற்காக தாபனக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மகப்பேற்று விடுமுறை பெற்றுக்கொள்வதற்கான உரித்துள்ளதுடன், குறித்த காலப்பகுதியில் பதிலீட்டுக் கொடுப்பனவாக 30 நாள்களுக்கு சமமான கொடுப்பனவு வழங்கப்படும்.

குறித்த மகப்பேற்று விடுமுறைக் காலத்தில் பதில் கடமைக்கு ஒருவரை ஈடுபடுத்த வேண்டியமையால், பெரும்பாலான உப அஞ்சல் நிலைய பெண் பொறுப்பதிகாரிகள் தமது மகப்பேற்று விடுமுறையை 30 நாள்களுக்கு மட்டுப்படுத்துகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. உலக சுகாதார தாபனம் மற்றும் ஏனைய மருத்துவ பரிந்துரைகளுக்கமைய குழந்தை பிறந்து குறைந்தது 06 மாதங்களுக்கு தாய்ப்பாலூட்டல் அவசியமாகும். அதற்கமைய, உப அஞ்சல் நிலைய பெண் பொறுப்பதிகாரிகளுக்கு தற்போது செலுத்தப்பட்டு வரும் 30 நாள்களுக்கான கொடுப்பனவை 84 நாள்களுக்கு செலுத்துவதற்காக வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

---

இந்தியா

# தள்ளுவண்டி செலுத்த தலைக்கவசம்

இந்தியாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தலைக்கவசம் அணிந்து தள்ளுவண்டியில் வியாபாரம் செய்துவரும் வீடியோ இணையத்தில் வைரலாகி வருகின்றது.

குறித்த இளைஞர் தலைக்கவசம் அணிந்த படி வீதியில் வியாபாரம் செய்வதைப் பார்த்த பொலிஸார் அவர் மேல் சந்தேகம் கொண்டு அவரை அழைத்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது, “தலைக்கவசம் அணியாதவர்களைப் பொலிஸார் பிடித்து அபராதம் விதித்து வருவதாகவும், ஒரு வேளை






தன்னையும் பிடித்து அபராதம் விதித்துவிட்டால் என்ன செய்வது என்ற அச்சத்தில் தான் இவ்வாறு தலைக்கவசம் அணிந்து வியாபாரம் செய்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

---

பஞ்சாப்

## 10 நாள்களில் 17 பயங்கரவாதிகள் கைது



“பஞ்சாப்பில் கடந்த 10 நாள்களில் 17 பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்” எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக பயங்கரவாத ஒழிப்புப் பணியில் பஞ்சாப் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில், கனடாவை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வரும் ‘லக்பீர் லண்டா’ மற்றும் பாகிஸ்தானை அடிப்படையாக கொண்டு இயங்கி வரும் ‘ஹர்வீந்தர் ரிண்டா’ உள்ளிட்ட அமைப்புகள் கூட்டாக இணைந்து நடத்தி வரும் ஐ.எஸ்.ஐ ஆதரவு பெற்ற பயங்கரவாத இயக்கங்களைச் சேர்ந்த 3 பேரைப் பொலிஸார் ஒக்டோபர் முதலாம் திகதி கைது செய்தனர்.

இதுபோன்று கடந்த 10 நாள்களில், 17 பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், அவர்களிடம் இருந்து ஏ.கே-56 ரக துப்பாக்கி ஒன்று, 2 தோட்டா உறைகள், 90 தோட்டாக்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

---

ஜார்க்கண்ட்

## தாயின் கண்முன்னே சிறுமி கூட்டுப்பாலியல்



சிறுமி ஒருவர் தனது தாயின் கண்முன்னே, கூட்டுப்பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம், ஜார்கண்ட் மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

ஜார்க்கண்ட மாநிலம் தும்கா மாவட்டத்தைச் சேர்ந்த குறித்த சிறுமியும், அவரது தாயும் அண்மையில் விழாவொன்றில் கலந்துகொண்டுவிட்டு வீடு திரும்பியுள்ளனர்.

இதன்போது மதுபூர் பகுதியில் வைத்து இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த 5 மர்ம நபர்கள், அவர்கள் இருவரையும் வழிமறித்து தாக்கியுள்ளனர்.

அத்துடன் அச்சிறுமியை அவரது தாயின் முன்னிலையில் கூட்டுப்பாலியல் வன்புணர்வு செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய், பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்ததையடுத்து, தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், இது தொடர்பில் இருவரைக் கைது செய்துள்ளனர் எனவும் மூவரைத் தேடி வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், விரைவில் குற்றவாளிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

---

கடலூர்



## மருத்துவமனையை அடித்து நொருக்கிய மக்கள்

கடலூர், சாவடிப் பகுதியைச் சேர்ந்தவர் மீனா. 58 வயதான இவர் கையில் எலும்பு முறிவு ஏற்பட்டு சிகிச்சைக்காக அங்குள்ள தனியார் மருத்துவமனையில் சனிக்கிழமை (08) அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட நிலையில், அவர் நேற்று முன்தினம் (10) உயிரிழந்து விட்டார் என மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதனைக் கேட்டு அதிர்ச்சியடைந்த மீனாவின் உறவினர்கள், ‘தவறான சிகிச்சை முறையே மீனாவின் உயிரிழப்புக்கு காரணம்’ எனக் குற்றம் சாட்டினர்.

ஆனால் மீனாவுக்கு நெஞ்சுவலி ஏற்பட்டதால் தான் உயிரிழந்தார் என மருத்துவமனை நிர்வாகத்தினர் விளக்கம் அளித்தனர்.


எனினும் இதனை ஏற்க மறுத்த உறவினர்கள், மருத்துவமனையை முற்றுகையிட்டு அடித்து நொறுக்கியுள்ளனர். இதுகுறித்து தகவல் அறிந்த கடலூர் பொலிஸார், சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர்.

இதனையடுத்து இரு தரப்பினரும் தனித் தனியாக புகார் அளித்த நிலையில் பொலிஸார் இது குறித்த விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

இமாசலப் பிரதேசம்

## பாலியல் வன்கொடுமையில் வெளியான திடுக்கிடும் தகவல்



பாலியல் வன்கொடுமை குறித்து இமாசலப் பிரதேச பொலிஸார் அண்மையில் நடத்திய ஆய்வில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளில் பதிவான பாலியல் வன்கொடுமை வழக்குகள் பற்றி இமாசலப் பிரதேசப் பொலிஸாரால் அண்மையில் ஆய்வொன்று நடத்தப்பட்டது.

குறித்த ஆய்வில் 52.4 சதவீத பாலியல் வன்கொடுமை வழக்குகளில், நன்கு தெரிந்தவர்களே குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக, நட்பின் வழியே அறிமுகமானவர்களால் 24.4 சதவீதமும், திருமணம் என்ற பொய்யான வாக்குறுதிகளின் பேரில் 16.9 சதவீதமும், ‘லிவிங் டுகெதர்’ மூலம் 4.1 சதவீதமும் மற்றும் அடையாளம் தெரியாத நபர்களால் 2 சதவீதமும் பாலியல் வன்கொடுமை வழக்குகள் பதிவாகியுள்ளன. எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இவற்றில், குறிப்பிடப்பட்ட பல வழக்குகள், சம்பவங்களை நடக்க விடாமல் முன்பே தவிர்க்க கூடிய வகையைச் சேர்ந்தவை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

---

அரியானா

## 3 விமான நிலையங்கள் கட்டப்படும்

### பஞ்சாயத்து தலைவர் தேர்தலில் வாக்குறுதி




அரியானா மாநிலத்தில், கிராமம் ஒன்றில், பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் அளித்துள்ள தேர்தல் வாக்குறுதிகள் இணையதளத்தில் வைரலாகி வருகின்றன.

குறித்த வேட்பாளர் “எனக்கு வாக்களித்தால் இலவச மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படும்; கிராமத்தில் 3 விமான நிலையங்கள் கட்டப்படும்” எனவும் வாக்குறுதி அளித்துப் போஸ்டர் ஒட்டியுள்ளார்.

இவரது வாக்குறுதிகள் அப்பகுதி மக்கள் மத்தியில் நகைப்பை ஏற்படுத்தியுள்ளன.

தேசிய விளையாட்டு விழா சைக்கிளோட்டப் போட்டி:

# கே.ஏ.எஸ்.என் பெரேரா, எம்.ஏ.டி மடோன்ஸா வெற்றி







கம்பஹாவில் கடந்த வாரயிறுதியில் 47ஆவது தேசிய போட்டிகள் ஆரம்பித்திருந்த நிலையில், பெண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டியில் கே.ஏ.எஸ்.என் பெரேரா வென்றதுடன், ஆண்களுக்கான போட்டியில் எம்.ஏ.டி மடோன்ஸா வென்றிருந்தார்.

30 வீராங்கனைகள் பங்கேற்ற இப்போட்டியில் இரண்டாமிடத்தை டபிள்யூ.ஏ ஆகாஷா சடமினி பெற்றதோடு, மூன்றாமிடத்தை உதேஷினி என். குமரசிங்க பெற்றிருந்தார். 178 வீரர்கள் பங்கேற்ற ஆண்களுக்கான போட்டியில் இரண்டாமிடத்தை ஆர்.டி.சி தயானந்த பெற்றதோடு, மூன்றாமிடத்தை டி.எஸ். நுகேர பெற்றிருந்தார். இப்போட்டிகளை இளைஞர், விளையாட்டமைச்சும், நெஸ்லேயின் நெஸ்டமோல்டும் இணைந்து ஒழுங்கமைத்திருந்தன.




முத்தரப்புத் தொடர்:

# பாகிஸ்தானை வீழ்த்திய நியூசிலாந்து

நியூசிலாந்து, பாகிஸ்தான், பங்கேற்கும் முத்தரப்பு இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரில், கிறைஸ்ட்சேர்ச்சில் நேற்று நடைபெற்ற பாகிஸ்தானுடனான போட்டியில் நியூசிலாந்து வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தானின் அணித்தலைவர் பாபர் அஸாம், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், மிஷெல் பிறேஸ்வெல் (2), மிற்செல் சான்ட்னெர் (2), இஷ் சோதி (1), டிம் சௌதிடம் (2) குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 130 ஓட்டங்களையே பெற்றது.



பதிலுக்கு 131 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, பின் அலெனின் 62 (42), டெவோன் கொன்வேயின் ஆட்டமிழக்காத 49 (46) ஓட்டங்களோடு 16.1 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக மிஷெல் பிறேஸ்வெல் தெரிவானார்.

இந்நிலையில், இன்று காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பங்களாதேஷை நியூசிலாந்து எதிர்கொள்ளவுள்ளது.

மாகாண விளையாட்டுப் போட்டியில் முதன்முறையாக தங்கம்:

## காத்தான்குடி. பத்ரிய்யா மாணவி மிஷ்ரத் சீமாவுக்கு வரவேற்பு



■ எம்.எஸ்.எம். நூர்தீன்

மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் முதன்முறையாக காத்தான்குடி பத்ரிய்யா வித்தியாலயத்தின் மிஷ்ரத் சீமா எனும் மாணவி குண்டுவீச்சு போட்டியில் முதலிடம் பெற்று தேசிய மட்டத்துக்குகு தெரிவு செய்யப்பட்டமையை கௌரவித்து இந்த மாணவியை வரவேற்கும் நிகழ்வானது, அம்மாணவி கல்வி கற்கும் புதிய காத்தான்குடி பத்ரியா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மாணவியை திறந்த வாகனத்தில் ஏற்றி மாணவர்கள் புடை சூழ காத்தான்குடி பிரதான வீதி வழியாக ஊர்வலமாக அழைத்துச் சென்று வரவேற்பளித்தனர். சாதனை மாணவிக்கு மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி வரவேற்று தெரிவித்தனர்.

சீமா, 14 வயது பிரிவு குண்டு குண்டுவீச்சு போட்டியில் முதலிடம் பெற்றிருந்தார்.

# பயிற்சிப் போட்டியில் வென்ற இலங்கை

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடருக்கான பயிற்சிப் போட்டிகளில், மெல்பேணில் நேற்று நடைபெற்ற சிம்பாப்வேயுடனான போட்டியில் இலங்கை வென்றது.

**ஸ்கோர் விவரம்:**

நாணயச் சுழற்சி: சிம்பாப்வே

இலங்கை: 188/5 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: குசல் மெண்டிஸ் 54 (29), வனிடு ஹஸரங்க ஆ.இ 37 (14) ஓட்டங்கள். பந்துவீச்சு: சிகண்டர் ராசா 1/8 [2], றயான் பேர்ள் 1/13 [2], மில்டன் ஷும்பா 1/7 [1], வெஸ்லே மட்ஹெவெரே 1/8 [1])

சிம்பாப்வே: 155/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: வெஸ்லே மட்ஹெவெரே 42 (42), மில்டன் ஷும்பா 32 (25) ஓட்டங்கள். பந்துவீச்சு: தனஞ்சய டி சில்வா 1/5 [1], வனிடு ஹஸரங்க 0/22 [4], டில்ஷான் மதுஷங்க 0/25 [4])



சீனா

# சீனாவில் மீண்டும் பொது முடக்கம்

சீனாவில் அண்மைக்காலமாகக் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக கடந்த திங்கட்கிழமை மாத்திரம் இரண்டாயிரம் பேருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சீனாவில் பெரும்பாலான நகரங்களில் பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில் இப்பொது முடக்கத்தால் சுற்றுலா வருவாய் பெருமளவிற்கு குறைந்துவிட்டதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான்

# இஸ்லாமாபாத்தை 2ஆவது தலைநகராக மாற்றுவோம்

ஆப்கானிஸ்தானில் கடந்த ஓராண்டாகத் தலிபான்களின் ஆட்சி இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் பாகிஸ்தானுக்கும், ஆப்கானிஸ்தானுக்கும் இடையில் மோதல் போக்கு நிலவி வருகின்றது.

குறிப்பாக ஆப்கானிஸ்தானில் உள்ள இலக்குகளைத் தாக்க, அமெரிக்காவின் ஆளில்லா விமானங்கள், பாகிஸ்தானின் வான்வெளியைப் பயன்படுத்த பாகிஸ்தான் அரசு அனுமதிப்பதாகவும், இதற்காகப் பெரும் தொகையைப் பணத்தை பாகிஸ்தான் பெற்றுள்ளதாகவும் தலிபான் அரசு குற்றம்சாட்டி வந்தது.

இதனையடுத்து அண்மையில் ஆப்கானிஸ்தானில் நிதி பரிவர்த்தனைகளில் பாகிஸ்தானிய ரூபாயைப் பயன்படுத்தவும் தலிபான் அரசு தடை விதித்திருந்தது.

இந்நிலையில் பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமாபாத்தை தங்களது



இரண்டாவது தலைநகராக மாற்றப்போவதாக தலிபான்கள் எச்சரித்துள்ளனர்.

இது குறித்து வீடியோ ஒன்றை வெளியிட்ட தலிபான் அதிகாரி அப்துல் பாசிர் ஷெர்சாடி, "ஒவ்வொரு ஆப்கானிஸ்தானியரும் பாகிஸ்தானை வெறுப்பதாக "தெரிவித்தார்.

மேலும் குறித்த வீடியோவில் "ஆப்கானிஸ்தானுக்கு 5,000 ஆண்டுகால வரலாறு இருப்பதாகவும், அதை எவ்வாறு பாதுகாப்பது என்பது தங்களுக்குத் தெரியும் எனவும் ,பாகிஸ்தான் மீது தற்கொலைப்படை தாக்குதல் நடத்த திட்டமிட்டு இருப்பதாகவும்" எச்சரித்துள்ளார்.



நியூசிலாந்து

# 500 திமிங்கலங்கள் கரையொதுங்கின

## அதிகாரிகள் காப்பாற்ற மறுப்பு

நியூசிலாந்தின் சாத்தம் தீவு பகுதியில், பைலட் வகையை சேர்ந்த 500 திமிங்கலங்கள் அண்மையில் திடீரெனக் கரையொதுங்கியுள்ளன.

எனினும் இப் பகுதியில் சுறா மீன்கள் அதிகளவில் காணப்படுவதால் கரையொதுங்கிய திமிங்கலங்களைக் காப்பாற்றுவது மிகவும் கடினமான விடயம் எனவும், மனிதர்கள் மற்றும் திமிங்கலங்கள் மீது சுறாக்கள் தாக்குதல் நடத்த கூடிய ஆபத்து உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனால், உயிருடன் இருந்த திமிங்கலங்கள், கருணை கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பைலட் வகை திமிங்கலங்கள் 20 அடி நீளம் வரை வளர கூடியவை எனவும், அவை தன்னுடைய இணை ஆபத்தில் சிக்கும்போது, அதனைப் பின்தொடர்ந்து செல்வதாகவும், கரையையொட்டி உணவு கிடைக்கும்போது, அதனை உண்டபின்பு, வழிதெரியாமல் கரையொதுங்கியிருக்கக் கூடும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா

# புடவை அணிந்த பெண்களைக் குறிவைத்துத் தாக்குதல்

அமெரிக்காவில் இந்தியர்களைக் குறிவைத்து இனவெறி தாக்குதல் நடத்தப்படும் சம்பவம் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில் அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் கடந்த 3 மாதங்களில் மாத்திரம் சுமார் 14 பெண்கள் மீது ஜோன்சன் என்ற 37 வயதான நபர் தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் சுமார் 50-73 வயது மதிக்கத்தக்க புடவை அணிந்த பெண்களைக் குறிவைத்தே இத்தாக்குதலை மேற்கொண்டு வந்துள்ளார் எனவும், அவர்களிடமிருந்து 35,000 டொலர்கள் மதிப்பிலான நகைகளையும் பறித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான்

# ஆடையால் தீவிரமடையும் போராட்டம்

## பாடசாலை மாணவர்கள் கைது

ஈரானில் அண்மையில் ஹிஜாப்பினை முறையாக அணியாத காரணத்தினால் 22 வயதான `மஹ்சா அமினி' என்ற பெண் பொலிஸாரினால் கொல்லப்பட்டார்.

இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், அரசுக்கு எதிராக ஆயிரக்கணக்கானோர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் தற்போது , நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவ-மாணவிகளும் இப் போராட்டத்தில் குதித்துள்ளனர். இந்நிலையில் இப்போராட்டங்களில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதனையடுத்து அந்நாட்டில் மேலும் பரபரப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





பாகிஸ்தான்

# ஊதியம் கேட்ட பெண்

## குடும்பத்தினர் முன்னிலையில் கூட்டுப் பாலியல் வன்புணர்வு

பெண்ணொருவர் தனது குடும்பத்தினர் முன்னிலையில் குண்டர்களால் கூட்டுப்பாலியல் வன்புணர்வு செய்யப்பட்ட சம்பவம் பாகிஸ்தானில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. பாகிஸ்தானின் பஞ்சாப் பகுதியில் பகவல்பூர் நகரில் வசித்து வருபவர் கங்காராம். இவரது மனைவி குசும் பாய் அப்பகுதியில் உள்ள பண்ணையொன்றில் கூலி தொழிலாளியாகப் பணிபுரிந்து வந்துள்ளார். இந்நிலையில் குசும் பாய், பண்ணை உரிமையாளரான முகமது அக்ரமிடம் சென்று, வேலைக்கான ஊதியத்தை வாங்கி வருவதற்காக கடந்த சில நாட்களுக்கு முன்னர் சென்றுள்ளார்.

இதன் போது அவரைக் கடுமையாகத் தாக்கி அடித்து விரட்டிய அக்ரம், அடுத்த நாள் , குண்டர்கள் 6 பேருடன் குசும் பாயின் வீட்டுக்குச் சென்று அங்கிருந்தவர்களைத் தாக்கியுள்ளனர்.

அதன் பின்னர் குசும் பாயை அவரது குடும்பத்தினர் முன்னிலையில் பாலியல் பலாத்காரம் செய்துள்ளதுடன், இது குறித்து பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தால் அவரது குடும்பத்தினரைக் கொலை செய்து விடுவதாகவும் எச்சரித்துள்ளனர். எனினும், இதனைப் பொருட்படுத்தாக குசும் பாய் மற்றும் அவரது குடும்பத்தினர் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று நேற்று முன்தினம் இதுகுறித்து புகார் அளித்துள்ளனர். இந்நிலையில் இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் புதன்கிழமை 12 ஒக்டோபர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.